உ
ஓம் விநாயகநம

சந்திரதீபம்

University of Jaffna Sri Lanka
RECEIVED
1990-10-07
Periodicals Division
Library

சைவம் வளர்க்கும் தமிழ் பத்திரிகை

தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது.

திருவாதிரை மலர்
இதழ் 3 சிக்கார்த்தி வருஷம் கார்த்திகை மாதம் 7ம் திகதி வெள்ளிக்கிழமை [23-11-1979] சுடர் 4

தில்லைக்கு இறையே பத்தியுடன்போற்றமாட்டாத என்னை நீ இகழ்ந்துவிடாதே

திருநடனம் ஆடுபவனே தில்லைக்கு இறையே! தேவரீரை யாது என உணர்ந்து போற்றிப்பத்தி செய்வேன். அம்பலத்து ஆடும் இறையே எவ்வாறு நான் உன் திருநடனம் காண இவ்வழி வந்தவாறு?

இப்படியாக ஓர் சுவை மிகுந்த கேள்வியை கடவுளைக் கேட்கின்றார் திருநாவுக்கரசர். தில்லைச் சிதம்பரத்தில் கடவுளைத் தரிசிக்கச் செல்கின்றார். செல்கின்ற அவர் தில்லைச் சிதம்பரம் சென்று திருக்கூத்தினைக் கண்ட பின் எல்லையற்ற அநந்தம் உள்ளே தலைப்பட தன்னை மறந்து இறைவனைப்பாடுகின்றார், அங்கு அவர் பல பாடல் பாடுகின்றார். எடுத்த முதல் பதிகத்து திருநட்டமாடியைத் தில்லைக்கு இறையை பெரு நட்டமாடியை வானவர் கோன் என்று வாழ்த்துவேன்! வேறு அறியேன் எனக் கூறிவிட்டு தொடர்ந்தும் பல பல பாடல் பாடுகின்றார். இந்தப் பதிகவரிசையில் தில்லையில் கூத்து ஆற்றொணாத பேரின்பமாக விளைகின்றது; எனவே இந்தப் பேரின்பத்தை சுவைத்து இன்புற்ற பின் பல பல வார்த்தைகள் நம் போன்றோர்க்கும் ஏற்பதாக வருகின்றன. அதில் ஒன்று

நீங்கள் ஒருமைப்பட்ட மனதுடன் இருந்து நினையுங்கள். உங்களுக்கு ஏதும் பழுதில்லை. இந்தக் கடவுள் பொல்லாத இயமனை உதைத்தவன். அதுவும் தனது அடியவர்க்காகச் செய்தவன். நீர் சென்று இவனை இங்கு தொழுங்கள்! இங்கு ஓர் அற்புதம் காணலாகும். அது என்னவெனில் அளவிறந்த கருணை உடையவன் இப்பெருமான்; அதற்கு சான்றாக நீர் யாரும் தரிசித்திடச் சென்றால் என்று வந்தாய் எனக் கேட்கும் திருக்குறிப்புடன் விளங்குகின்றான். எனவும் கூறி தொடர்ந்தும்.

இவனுடைய திருமேனியின் வனப்பு எவ்வாறு இருப்பது பாருங்கள்! இவனது புருவங்கள் குனித்தபடி உள்ளன. கொவ்வைப் பழம் போன்ற சிவந்த திருவாயில் குமிழஞ் சிரிப்பு; குளிர்ந்த சடை; பவளம் போலும் திருமேனியில் பால் போலும் வெண்மைத் திருநீறு. திருப்பாதம் காண நினைக்க தித்தித்து இனிக்கின்றது. இந்த திருக்கோலம் காணப்பெற்றால் மனிதப் பிறவியும் நிச்சயம் இந்த உலகில் வேண்டுவது தான் என்கின்றார் திருநாவுக்கரசர்.

இனித்தமுடைய பொற்பாதம் காணப்பெற்றால் என அவர் மொழியும் போது உலகில் உள்ள இனிமை எல்லாம் கடந்த இனிமையானது எம்பெருமான் திருவடிகள் என்பது நினைவுபடுத்தப்படுகின்றது.

ஆம் மனிதப் பிறவியும் வேண்டும் தான்! என்றபோது மனிதப் பிறவியின் பேறு இதுதான் என்றது மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார்.

நமது நிலையில் மனிதப் பிறவி தரப்பட்டது எதற்காக எனின் பிறந்து கல்வி பயின்று உத்தியோகம் பெற்று உழைத்து வீடுகட்டி வாகனம் மனைவி மக்கள் பணம் இவற்றுடன் சிறந்து பல பல சிறப்புகளுடன் வாழ்வதே சிறப்பாவது என நினைப்பது! இந்த சிறப்புக்களைப் பெறும்படியாகவே கடவுளைப் பிரார்த்திக்கின்றோம். இது மனித இயல்பு.

ஓர் ஜனாதிபதியாகவோ பாராளமன்ற அங்கத்தவராகவோ அரச சேவகத்தில் தலமை தாங்குவாராகவோ இருக்கும் நாட்கள் எத்துணைச் சிறப்பு! இதை விடுத்து வேறு என்ன சிறப்பு! மிலேச்சருடைய கொள்கை மது மங்கை வாகனம் இவ்வளவும் பெறாதவன் மனிதன் அல்ல என்ற வகையாக இருக்க; எங்கள் நாட்டிலும் இந்த மிலேச்சக் கொள்கையே பெருகி எல்லாரும் இதையே விரும்பிடும் அளவிற்கு இந்த மிலேச்சக் கொள்கை பரந்துளது.

இந்த நிலையை நாம் அவதானித்தால் திருநாவுக்கரசர் சொல்கின்ற அந்த மனிதப் பிறவியின் பேறு குனித்த புருவமுடன் கொவ்வைச் செவ்வாயில் குமிழ்ஞ்சிரிப்பு மலர குளிர்ந்த திருச்சடையுடன் பால் போலும் மேனிமேல் வெள்ளை நீறும் இனித்தமான ஆடும்படி தூக்கிய திருப்பாதமும் காணப் பெற்றால் அதுவே சிறப்புடையது! மனிதப் பிறவியின் உண்மைப் பேறாவது! எனக் கூற இதை எத்தனை பேர் ஏற்பார் என்பதுவே கேள்வி.

உலகில் உள்ள பல இன்பத் துறைகளையும் கைவிடுத்து தனித்து இது ஒன்றிற்காக மட்டும் நாம் முயல்வதோ? நாலுபேர் மதித்திட ஓர் பெரியவர் நாம் என வாழாது எல்லாவற்றையும் விடுத்து இதை நாட மனம் சம்மதியாதே!

இதற்கு என்ன செய்யலாம். இந்த இன்பம் கண்டால் பின்னர் உலகம் எம்மை என் சொல்லிப் போற்றியும் அல்லது தூற்றியும் நாம் என்னாவது. நமக்கு ஓர் சிறப்பு வந்தால் உலகில் மக்கள் எம்மை ஓர் பெரியவர் என மதியாத பொழுது என் பயன் வாழ்ந்து என்பதே மனம் அடிக்கடி எழுப்பும் சந்தேகமாகும்! இந்த சந்தேகங்களை விபரீதங்களை நாம் தாண்டி மேலாகச் சிந்தையை நிறுவச் செய்தல் அரிதினும் அரிது.

ஆதலினால் மனிதவாழ்வின் பயன் தில்லைத் திருக்கூத்தின் திருநடனம் காண்டல் என்றால் இதற்கு மனம் தன்று உறிதி பெறுவது என்பது உண்மையான ஒரு பிரச்சனை! இதைத் தாண்டி சிந்தை தெளிவு பெற மனதைத் திடப்படுத்திக் கொள்ள முதலாவதாக கரவில்லாத வாழ்வு வேண்டும் என்றே திருநாவுக்கரசர் சொல்லி இருக்கிறார்.

அதுமட்டுமல்லாது இந்த உயர்ந்த தெளிவான சிந்தையைப் பெறற்கு தொண்டு தான் முக்கியம் என்பதற்கு திருநாவுக்கரசர் திருக்கையில் உளவாரம் துலங்குகின்றது. ஆம் உண்மையான தொண்டு; ஏதும் நோக்கமிலாத தொண்டு தான் உயர்ந்த சிந்தையை வருவிக்கும். தொண்டு செய்யாது வாய்வேதாந்தம் பேசிய எந்த ஞானியும் ஒரு போதும் உண்மை காணார். யோகியும் அறியார் என்பது தான் நமது பெருமக்கள் துணியாகும்.

திருநாவுக்கரசருடைய மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த பெரும் பூமியில் தில்லைச் சிவனின் திருக்கூத்துக் காணவென்றால் என்ற போது அதன் தாற்பரியம் கருத்து என்னாவது என் பயனாவது என்றே சிந்தித்தல் நலம். எத்தனையோ மக்கள் தில்லை சென்று வழிபட்டனர். வழிபட்டுக்கொண்டிருக்கிறார். ஆனால் இவர்கள் யாரும் அற்புதமாக ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் இவர் மட்டும் மனிதப் பிறவி வேண்டுவதே என்று சொல்லிடும் போது அங்கு அவர் பெற்ற நயம் என்ன என்றது தான் கேள்வி? அதை அவர் சொல்லி விட்டார் அன்றி அதை உணர்த்திக் காட்ட முடியாததாக உள்ளதாகவே கருத வேண்டும். இதனை பேசரிய இன்பம் என்று பெரியோர் மொழிவர்.

பெரிய புராணம் பாடிய சேக்கிழாரும் இந்த உண்மையை ஒருவாறு தெளிய வைக்கின்றார். ஊனாகி நிறைந்த இந்த உடம்பின் பிறவி தில்லையில் பெருநட்டம் ஆடியருளும் பெருமானைத் தொழுதால் தான் அடைய வேண்டிய உறுதியை அது சேரும் என்கின்றார்.

திருவாதிரை நாள் இந்தத் தெரிசனத்திற்கு மிகவும் பொருந்துவதொன்று. எங்கும் தில்லைச் சிதம்பரம் எங்கும் திருக்கூத்து எங்கும் சிவன் திருமேனி எல்லாம் நீயே என் உள்ளும் நீயே என ஒடுங்குவதற்கு ஏற்ற நாள். ஆதலின் இம் முறையில் திருவாதிரை நாள் மலராக இந்தத் தீபத்தை அடியார்கள் முன் வைக்கின்றேன்.

எம்பிரான் சிவன் திருவருட் பெருக்கத்தை ஏற்றுக்கொண்ட திருநாவுக்கரசர் எடுத்த எடுப்பில் இனி நாம் ஆர்க்கும் குடி அல்லோம் எனக் கூறுகின்றார். இன்று இதன் தாற்பரியத்தை உணரவல்லார் மிகு சிலரே எனலாம். எல்லாருமாக மேடைமேல் நின்று வீரமுடன் பேசலாம். ஆனால் அநுபவத்தில் ஏற்று நடந்து கொள்ளல் அரிதினும் அரிது.

சமயம் என்றால் வியாபாரம் அல்லது விளம்பரம் அல்லது மேடைப் பேச்சு விழா என்ற வகையே நம் தமிழ் நாட்டில் நிலை வந்து கொண்டது. உதாரணமாக திருநாவுக்கரசர் நாம் ஆர்க்கும் குடி அல்லோம் என்ற போது பிறரைப் பார்த்து வீரம் பேசுவதாக மொழிந்துளாரா? அல்லது தலையாய உணர்ச்சியின் தலைப்பாட்டில் இதை மொழிந்துளாரா? இதை யாரும் நீங்கள் சிந்தியுங்கள்! தனது அநுபவமிலாது சமயப் பிரசார நோக்கிற்காக வேனும் இதை அவர் மொழியவில்லை, அது அப்படியான காரியம். இந்த வார்த்தை மெய்ப்பாடு என்ற அளவிலும் கொள்ளமுடியாது. அவ்வளவு அருளின் சிறப்புணர்ச்சியில் எழுந்த வாக்கியம் நாம் ஆர்க்கும் குடி அல்லோம் நமனை அஞ்சோம் எனத் தொடங்கி சிவன் அருள் பெற்ற வகையால் எழுந்த நலத்தைப்பாடுகின்றார்.

அடுத்து தில்லையில் வந்து எல்லை காண்பரிய திருநடனத்தை தரிசித்த பிற்பாடு அரியானை எனத் தொடங்கி அந்தணர்தம் சிந்தையானை அரிய வேதங்களின் உட்பொருளானை அணுவுக்கும் அணுவானை யார்க்கும் தெரிய முடியாத தத்துவனை தேன் பால் போல் சுவைப்பானை எங்குமாகி மிளிரும் சோதியை கரும்பின் இன் சுவையானானை என்றெல்லாம் கூறி இவரே பெரியவர் இவரை பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே எனக் கூறிடுகின்றார். இப்படிக் கூறிடும் அவரை நீ கண்டீர் அவர் எங்குற்றார் காட்டு வீரோ என்பார்க்கு இங்கு காணலாம் என்ற வகையாக மடவார்கள் பார்வையில் நடுக்கமுறாத சிந்தை உடையராய் எல்லாப்பற்றையும் அறவே நீக்கிய தபோதனர் சித்தத்து பெரும் பயனாக விளைகின்றான் அவன் அங்கு காணலாம் என்கின்றார்.

ஆம் நல்லது, இந்த வகையினை நாம் சிந்தித்தால் இன்று நமது மக்கள் எவ்வளவு தூரம் மலைமேல் உச்சியில் நின்றும் வழுவிய பாறாங்கல்லைப் போல் ஆகிவிட்டார். மலை உச்சியில் இருந்து கல்லை கீழே உருட்டிவிடல் மிகச் சுலபம். ஆனால் மேலே ஏற்றிக் கொள்ளு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல் மிகக் கடினம்.

இன்று எங்கள் நாட்டில் மயில் ஆடக்கண்டு வான் கோழி வால் தூக்கியது போல் பல சாமியள் தோன்றி மேடை ஏறி பஜனை பாடி ஒளி காட்டி. எத்தனையோ இந்திரசால வித்தைகளை எல்லாம் செய்கின்றனர். இந்தச் சாமியள் பல பல பஜனை பாடி பின்னணியில் பெண்களையும் இனிமையுடன் குரல் கொடுக்கப்பண்ணி சேர்ந்து பாடி ஈற்றில் 60 வது வயதில் கன்னைகையை அணைத்து திருமணம் புரிந்துளது. இதற்கு ஆத்ம ஜோதி பத்திரிகை மூலம் பெரும் சிறப்புக்குள்ளான பித்துக்குளி என்பவரின் வாழ்க்கையை சான்றாகக் காட்டுகின்றேன்.

ஆண்களும் பெண்களும் வித்தியாசம் பாராட்டாமல் அருகருகிருந்து பாடிடும் போது அல்லது பஜனை செய்யும் போது அது ஒரு தெய்வீக நிலையாக ஒருபோதும் வராது. ஒரு நாள் ஒரு கூட்டுப் பிரார்த்தனைக்கு என்னை வருமாறு அழைத்தார்கள். நான் போனேன். போய் அதில் கலந்து விட்டு மறு நாள் யோக சுவாமியைக் கண்டேன். அவர் என்னை நோக்கி கூட்டுப்பிரார்தனைத் உனக்கு வேண்டாம் விரும்பினால் உன் பிள்ளைகளுடன் சேர்ந்து உனது வீட்டில் பிரார்த்தனை செய் என்றார்.

உண்மையாக அன்று சுவாமி அறம் காட்டி ஆட் கொண்ட புண்ணிய நாள் என்றே நினைக்கலாம்.

உலகில் மனிதனுடைய சிந்தை மலம் பற்றும் தன்மை உடையது. செம்பில் கழிம்பு எவ்வாறு பிறர் ஒருவரின் அல்லது பிற பொருளின் தொடர்பின்றித் இயல்பில் தோன்றுவதோ அதே தன்மை போல் மனிதன் சிந்தையிலும் மலம் பெருகும்.

இந்த மலப்பற்றில் தான் காமம் குரோதம் கோபம் முதலிய குணங்கள் தலைப்படுவன. ஆதலினால் இந்த மனதில் ஏற்படும் இந்த தீமையின் தொடர்பில் நின்று எவரும் இலகுவில் தப்ப முடியாது. தனது சிந்தை மலம் நீங்கி புனிதப்படும் நேரம் அல்லது காலம் எவ்வளவோ அவ்வளவும் இந்த காமக் குரோதம் இவையாவும் தலைப்பட்டபடியே இருக்கும். ஆனதினால் இந்த காமம் கோபம் குரோதம் முதல் தீங்குகள் சந்தர்ப்பத்தை சேர்க்கையை ஒட்டி தலைப்படுவன.

ஒரு அழகுடைய பெண்ணை ஓர் ஆடவன் காணும் போது அவனை அறியாது அவள் மேல் சிந்தை ஏற்படுகின்றது. இன்னும் அருகில் வந்து அமரும் போது அந்தச் சிந்தையை தெளிந்தாரும் கட்டுப்படுத்த முடியாதபடி ஏதோ உணர்ச்சிகள் தலைப்படும். இதே போன்று ஓர் அழகுடைய ஆடவனைக் கண்ட போது ஓர் பெண்ணின் சிந்தையும் மயங்கும். இவை இயல்பு. இதை இல்லை என்று யாரும் மறுக்க மாட்டார்.

ஆதலினால் சந்தர்ப்ப நிலையில் சிந்தை பழுதாகிப் போகாத ஒரு வகையில் நடந்திட வேண்டுமென்றால் கடவுள் சந்நிதி என்றாலும் பிரார்த்தனை என்றாலும் பஜனை என்றாலும் ஆண் பெண் அருகிருக்கும் நிலை ஏற்படும் போது சில நேரத்து அந்த நிலை ஓர் மனத் தடுமாற்றத்தை விளைவிக்க முடிகிறது.

பெரிய புராணத்தில் இதற்கு தக்க தொரு எடுத்துக் காட்டு தரப்பட்டுள்ளது. சிறுத் தொண்ட நாயனார் இல்லத்து சிவன் பைரவ வேடம் தாங்கி வருகின்றார், வந்த பைரவர் சிறுத் தொண்டர் இல்லாத நேரம் மனை வாசலில் நின்று சிறுத் தொண்டர் உள் இருக்கின்றாரோ எனக் கேட்கின்றார்; அவர் இலாமையால் மனைவி திரு வெண்காட்டம்மை நேர் வந்து பணிந்து ''ஐயனே அவர் இப்பொழுது சிவனடியாரை அழுதூட்ட அழைத்திட தேடிப் போய் உள்ளார். தாங்கள் தாமாக எழுந்தருளி வரக்கண்டால் தாம் செய்த பேறு எனவே நினைப்பர். ஆதலின் உள்ளே எழுந்தருளி இருங்கள்'' என்றதும் பைரவர் சொன்ன ஒரே பதில் பெண்கள் தனித்திருக்கும் இடத்து நாம்புகோம் என்றதாக இருந்தது.

எமது சைவ மதம் தருமத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்த சைவத்தின் தரும நிலையின் அடிப்படை உயர்ந்த சீலங்களைப் பற்றுவதாக அமைந்தது ஆதலினால் தெய்வீகம் என்பது பெண் ஆண் என்ற வகையில் உடல் உறவு மட்டு மன்றி சிந்தையாலும் அல்லது மனத்தாலும் தீண்டாதிருப்பதுவே உயர்ந்தது. உண்மை புலப்பட்ட திரு நீலகண்டர் தன் மனைவியை நோக்கி ''உன்னை அன்றி மற்ற மாதரார் தம்மை என்தன் மனத்தினும் தீண்டேன்', என்கின்றார்.

இதனாலே உண்மையான தெய்வீகம் தலைப்ப மிடத்து அதுவும் மனிதரில் தலைப்படு மிடத்து அங்கு முழுவதும் காமம் குரோதம் கோபம் மோகம் இவை நீங்கப்படல் வேண்டும்.

இந்த ஒரு நிலை இறைவன் கருணையால் ஏற்படுமன்றி ஏனைய வகை அது கூடாது. ''பொருந்தணை மேல் மடவாருடன் வரும் பயனை போகம் மாற்றி'' என்றும் திருநாவுக்கரசர் கூறிடுகின்றார்.

பெண்கள் எழிழ் கண்டு மயங்குவது பொதுவாக மனிதரின் இயல்பு. அதைக் கண்டு மயங்கும் மயக்கத்தை குருபரனின் அருள் நீக்கியது என ''ஏடு அவிழ் கோதை மாதர் எழில் கண்டு மயங்கா வண்ணம் தாள் தலைவைத்த சற்குரு'' என யோசுவாமிகள் போற்றுகின்றார்.

ஆதலினால் முற்றிலும் காமாதி குணங்களைக் கைவிட்ட பெரியோர் உளத்தே திருக் கூத்து பிரகாசிப்பது. அங்கு தான் ஓங்காரம் பிரகாசிக்கும். ஓங்காரத்தின் உள் ஒளிக்குள் கடவுள் இருப்பார்.

ஆகவே மடவார் நோக்கில் துளங்காத சிந்தை உடையராய் ஏனைய குரோதம் முதல் குணங்களையும் களைந்த பெருமக்கள் பாதம் போற்றி அவர் கண்ட திருக்கூத்தின் அற்புதப் பாடலை கீழே காணுங்கள்.

திருச்சிற்றம்பலம்

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி
எத்தினாற் பத்திசெய்கேன் என்னைநீ இகழவேண்டாம்
முத்தனே முதல்வா தில்லை அம்பலத் தாடுகின்ற
அத்தாவுன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே.

எம் பெருமானே! அடியேன் தேவரீரை பத்தியுடன் பத்தனாகிக் கசிந்து பாடமாட்டேன். எல்லாப் பொருளுக்கும் எட்டொணாது கடந்து மேல் நின்றவனே! அடைய யொணாத யோகி! என்னவகையாக உன்னை அறிந்து பத்தி செய்வேன் அது என் நிலையில் இயலாத காரியம் ஆனதினால் நீ என்னை இகழ வேண்டாம் (கைவிட்டிடாதே) ஜீவன் முத்தி ஆனவனே! யார்க்கும் முதல்வா! தில்லை அம்பலத்துள் நின்று ஆடுகின்ற எனது தலைவா! உனது ஆடலைக் காணும் படியாக நான் வந்தவாறு என்ன அற்புதம்!

திருக் கூத்து அதிசயமாயும் ஆனந்தமாகவும் விளங்கிடுகின்றது! எதிர்பாராத ஒன்றாக இருக்கின்றது! எனவே இதைக் கண்டிட தான் வந்த வரலாற்றை வியந்து பேசுகின்றார்! 1

கருத்தனாய்ப் பாட மாட்டேன் காம்பன தோளி பங்கா
ஒருத்தரால் அறிய வொண்ணாத் திருவுரு வுடைய சோதீ
திருத்தமாந் தில்லை தன்னுள் திகழ்ந்தசிற் றம்ப லத்தே
நிருத்தம்நான் காண வேண்டி நேர்பட வந்த வாறே.

சிவனே என் உள்ளத்தின் உள்ளே உன்னையே நினையும் நினைப்புடன் பாடமாட்டேன் அருள் கருத்துக்கள் என் பாடலில் தோன்ற நான் பாட மாட்டேன். மூங்கில் தண்டின் பசுமை போலவனப்புடைய தோள் அமைந்த உமையம்மையார் பாகனே! இவ்வுலகில் எவர் ஒருத்தராலும் அறிய வொண்ணாத திருவுருவம் அமைந்து கொண்ட சோதியே. எல்லா சிறுமைகளும் நீங்கி திருத்தமுற்ற சிறந்த இலட்சியங்கள் தோன்றும் தில்லை என்னும் நகர் உள்ளாக திகழ்ந்தவாறு இருக்கும் சிற்றம்பலம் என்னும் பொற்சபையில் நீ நின்று ஆடும் திருக்கூத்து நான் காண வேண்டி நேராக நான் இங்கு வந்த வாறும் அவ்வாறு வரும் போக்கை அளிந்த புண்ணிய விளைவையும் எவ்வாறு எண்ணிக் கொள்வேன்.

காண்டற் கரிய திருக்கூத்தை காணும் படி ஊட்டிவைத்த ஊழை வியக்கின்றார். கூத்தின் அற்புத விழைவு அது யார்க்கும் அறிய வொண்ணாதது. அவமே பெருக்கும் உலக மக்களினதும் அவர் போக்கில் இது அமையாது என்பதால் ஒருத்தரால் அறிய முடியாத திருவுரு என்கிறார். திருத்தமாம் தில்லை என்பது காம குரோத மயக்கங்கள் கடந்த பெரியோர் உறைதலினால் திருந்திய நிலை பெற்றது. 2

கேட்டிலேன் கிளைபி ரியேன் கேட்குமா கேட்டி யாகில்
நாட்டினேன் நின்றன் பாதம் நடுப்பட நெஞ்சினுள்ளே
மாட்டினீர் வாளை பாயும் மல்குசிற் றம்ப லத்தே
கூட்டமாங் குவிமு லையாள் கூடநீ ஆடு மாறே.

தேவரீரை நான் ஒன்றும் கேட்கவில்லை உன் கிளைகளை இனி ஒரு போதும் பிரியேன். என்னை யாதும் நீ கேட்குமாறு கேட்டி என்றால் உனது திருப்பாதத்தை எனது நெஞ்சின் உள்ளாக நடுவில் நாட்டிக் கொண்டேன் என்பதேயாகும். நீரின் நிறைவால் நீரைக் கிழித்தெழுந்து வாளை மீன்கள் பாய குளிர்மையுடன் விளங்கிடும் சிற்றம்பலத்து இரண்டும் ஒரே கூட்டாக சிறந்த குவிந்த முலை உடைய உமை அம்மையார் உடனாக நீ ஆடுகின்ற அற்புதம் இருந்தவாறு என்ன அதிசயம்.

யாதும் நான் உன்னை கேட்கவில்லை. ஒன்று மட்டும் கூறலாம் அது இனி உன் கிளைகளாய அடியார் கூட்டம் பிரியேன் என்கின்றார். ஏதும் கேட்குமாறு கேட்டால் இதுவே என் பதில் என்கின்றார், அடுத்து உன் திருப்பாதம் என் நெஞ்சின் நடுவணாக நாட்டிக் கொண்டேன். ஆனதினால் இனி யாதும் குறைவில்லேன் எனவே யாதும் உன்னிடம் கேட்க வேண்டியதில்லை என்றது குறிப்புப் போலும் இரு முலைகளும் இணையாக அமைதலின் கூட்டமாங்குவிமுலையாள் என அம்மையின் திரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகம் சர்வம் சிவமயம்

கதா உபநிடதம் பகுதி (5)

1. இது அதுவே உள்ளத் துள்ள நிலையாகும் அஸ்வத்த மரம் அதனுடைய வேர்கள் மேலாகவும் கொம்பர்கள் கீழாகவும் உளது. அதனுடைய வேர் தான் உண்மையில் பிரகாசமாக உளது. அதே போன்றதே பிரமம். அது ஒன்றே அழிவற்றது. அதனிடத்திலேயே எல்லா உலகமும் தங்கி உளது. அதனைத் தாண்டி எந்த உலகமும் மேல் போக முடியாது. இது அப்படி உள்ளகாரியமாகும்,

அஸ்வத்த மரம் வேரில் அதன் கன்றுகள் முளைப்பன. எப்படி எனில் மேல் உள்ள கொம்பர்கள் தாழ்ந்து வந்து கீழ் வேரில் முட்டலும் கீழ் வேரில் நின்றும் மரங்கள் முளைப்பன. ஒரு வகை காட்டினுள் நிற்கும் மரமாகும். அதே போன்று பிரமத்திடத்தில் எல்லா உலகமும் தங்கி இருப்பன.

2, எது எது உளதோ அவையாவும் இந்த முழு உலகமும் பிரமத்தினின்றும் வெளிப்பட்டு பிரமத்தை விடுத்து மிக மிகத் தூரம் தூரம் சென்றுள்ளன. சென்ற உலகம் எல்லாம் தங்கும் பூமியாக பிரமம் உளது, அந்தப் பிரமம் பயங்கரமானது. அது ஒரு பயங்கரமான வச்சிராயுதம் போன்றது. அதனை உணந்தார்கள் அழிவற்ற நிலையை அடைக்கின்றனர்.

3. பிரமத்தின் பயங்கரத்தால் நெருப்பு எரிகின்றது. பிரமத்தின் பயங்கரத்தால் சூரியன் பிரகாசிக்கின்றான். அதனின் பயங்கரத்தால் இந்திரன் வாயு இயமன் யாரும் அசைவின்றி தம் கருமம் செய்கின்றனர்.

இந்திரனால் புலன்கள் வாயுவால் பிராணன் இயமனால் மரணம் என்பவை தொழிலாகும்.

4. ஒருவன் தனது உடம்பு இறந்து விழும் முன்பு இந்த பிரமத்தை உணர்கிறானோ அவன் பின்னர் விடுதலை அடைகின்றான். அப்படி அல்லையேல் அவன் பின்னரும் தோற்றமாகும் உலகங்களில் சிக்கிக் கொள்கின்றான்.

5. கண்ணாடியில் தனது சாயையைக் காண்பது போல் புத்தியில் பிரமம் தெரியப் படுகின்றது. கனாவில் போலவே பிதிர்கள் உலகில் தெரியப் படுகின்றது. நீரில் நிழல் போலவே கந்தருவர் உலகில் பிரமம் தெரியப்படுகின்றது. ஒளியும் அதன் சாயையும் போலவே பிரமம் உலகங்களில் காணப்படும்.

கனாவின் காட்சி நீரில் நிழல் போலவன பிதிர் உலகத்தும் கந்தர்வ உலகத்தும் பிரமத்தின் காட்சி. ஆனால் கனா நீங்கிய நனவு நிலையில் உண்மைக் காட்சி போலவே பிரமத்தின் காட்சியும் தெரியப்படும் என்றவாறு.

6. இந்திரியங்களை நன்கு விளக்கிக் கொண்டு அவர்களது தொடர்பு வேறு என்பதை அறிந்து அதுவும் ஆத்மாவில் வேறானது என உணர்ந்து அவைகளின் உதயமும் மறைவும் அவைக்கே தனித்த உரித்தானது எனக் கண்டு கொள்பவன் இனிமேலாக எக்காரணம் பற்றியும் கவலை உறான்.

7. இந்திரியங்களுக் கப்பால் மனம் இருக்கின்றது மனதிற் கப்பால் புத்தி இருக்கின்றது. புத்தியிலும் அப்

மேனிச் சிறப்பு பேசப்பட்டது; அவளும் தானும் உடனாக நின்றாடும் அற்புதம் அது காண்டற்கரிதாக நிறைதலின் ஆடு மாறே என அதிசயிக்கின்றார்;

கற்பனை கடந்த சோதியாகி கருணையே உருவமாகி அற்புதக் கோலமே நீடித்து விளங்கிட பொற்புடன் ஆடியருளும் அதிசயம் போற்றியவாறு. 3

சிந்தையைத் திகைப்பி யாதே செறிவுடை அடிமைசெய்ய எந்தைநீ அருளிச் செய்யாய் யாதுநான் செய்வ தென்னே செந்தீயார் வேள்வி ஓவாத் தில்லைச்சிற் றம்ப லத்தே அந்தியும் பகலும் ஆட அடியிணை அலசுங் கொல்லோ.

எனது சிந்தையை பல பல சங்கடங்களைத் தந்து திகைப்பியாது உன் பால் சிந்தை ஒருமைப் பட்டுச் செறிந்திட வரப்படுகின்ற அடிமைத் தொண்டுகள் செய்திட எந்தை பெருமானே நீ இனி அருள் செய்வாயாக. அப்படி அல்லா திருப்பின் நான் வேறுயாது செயல் செய்வது என்னவாகும்?. செந்தீ வளர்த்து உனக்கு செய்யப்படும் வேள்விகள் ஓயாத தில்லைச் சிதம்பரத்து இரவும் பகலுமாக நின்று எந்நேரமும் நீ ஆடிக் கொண்டிருப்பதால் உன் திருவடிகள் வேதனையுறாதோ!

திகைக்கும் சிந்தையைத் தெளிவு படுத்தல் உனது அருள். சிந்தையை நீ திகைப்பித்தால் உனக்குற்ற அடிமைத் தொண்டுகள் வீதி செருக்கல் கூட்டல் கழுவுதல் பூக்கொய்தல் மாலை கட்டல் என்னால் செய்ய முடியாது. தொண்டுதான் அடிமைத்திறம்; அத் தொண்டு மூலமே இறைவன் அருளிற்கு நாம் அணுகப்படலால் அதைச் செறிவுடை அடிமை என தெரிவிக்கின்றார். செறிவு அங்கு சேர்வது என்றதாகும். தொண்டாய அடிமைத்திறம் சிவன் பால் சேர உய்க்கும் என்றபடி; மனம் மிண்டுதல் திகைப்பாவது. ஒரு வழியால் செல்பவர் வேறு வழியையும் பற்றினால் திகைப்புத்தானே. ஆதலின் உன்னை அடைய நீயே வழி காட்டு என்கின்றார்,

யோக சுவாமிகளும் செல்வக் குருநாதா செல்வக்குருநாதா சிந்தை தடுமாறு தடா திருவருளைத் தந்திடடா எனக் கேட்கின்றார்.

தில்லைச்சிதம்பரத்து நித்திய அக்கினி வளர்ப்பதும் ஆகுதி செய்தலும் முன்னர் ஒய்வின்றி நிகழ்வன. ஆகுதிகள் மூவாயிரம் எனவே கூறப்படுவன, ஆதலின் செந்தீயார் வேள்வி ஓயாத எனப் பட்டது.

இரவும் பகலும் நீ ஆடுதலின் திருவடி நொந்து போகாதோ எனவும் கேட்கின்றார், இது திருக்கூத்தின் மெய்மை உணர்வாகும். 4

கண்டவா திரிந்து நாளுங் கருத்தினால் நின்றன் பாதங் கொண்டிருந் தாடிப் பாடிக் கூடுவன் குறிப்பி னாலே வண்டுபண் பாடுஞ் சோலை மல்குசிற் றம்ப லத்தே எண்டிசையோரும் ஏத்த இறைவநீ ஆடு மாறே.

திருக் கூத்துக் கண்டேன், இனி மேலாக நான் கண்டபடி திரிவேன். திரிந்து திரிந்து நாள்தோறும் நல்ல கருத்தினால் உனது திருப்பாதத்தைக் பெற்றுக் கொண்டிருந்து ஆடிப் பாடிக் குறிப்பினால் உன்னைக் கூடுவேன். வண்டுகள் பண் பாடும் சோலைகள் சிறந்து விளங்கிய தில்லைச் சிதம்பரத்து நின்று எட்டுத் திக்கில் உள்ளாரும் போற்றும்படி என் இறைவா நீ ஆடுகின்ற வகையின் அற்புதம் எவ்வாறு.

திருக்கூத்தை உண்மையாம்படி கண்டுகொண்டேன். அது எங்குமாகி நிறைவதையும் உணர்கின்றேன், எங்கும் சிதம்பரம் எங்கும் திருக்கூத்து எங்கும் திருமேனி என்பதாகத் தெளிந்தேன். ஆதலின் கண்டவாறு எங்கும் திரிவேன். அங்கும் இங்கும் எங்கும் திருக்கூத்தாதலின் இதை அறிவது கருத்தே ஆதலின். நாளும் நம் கருத்தினால் திருக்கூத்தைப் பெற்றுக் கொண்டு ஆடிப் பாடித் திரிவேன் என்கிறார்,

எல்லாத் திக்கில் நின்று எல்லாரும் வழிபட நீ ஆடுகின்றாய். இதன் அற்புதம் பேசரியது என்றபடி, 5

பார்த்திருந் தடிய னேன்நான் பரவுவன் பாடி யாடி மூர்த்தியே என்பன் உன்னை மூவரில் முதல்வன் என்பன் ஏத்துவார் இடர்கள் தீர்ப்பாய் தில்லைச்சிற் றம்ப லத்துக் கூத்தாவுன் கூத்துக் காண்பான் கூடநான் வந்தவாறே

எங்கும் உன் திருக்கூத்தாகப் பார்த்திருந்து உனது அடியேன் நான் கும்பிடுவேன். பாடி ஆடி மூர்த்தியே என் முதலே என்பேன், உன்னை பிரமவிட்டுணு உருத்திரன் என்னும் மூவரிலும் முதல்வன் என்பேன். ஏத்துவார் இடர்களை நீ தீர்பாய். தில்லைச் சிதப்பரத்துக் கூத்தாடியே உன் கூத்தைக் கண்டு உன்னைக் கூடிக் கொண்டிட நான் இங்கு வந்தவாறு மிகநன்றாகி உளது.

இன்று இங்கு வந்து திருக் கூத்தைக் கண்டேன். இன்று தான் உண்மை கண்டேன், எங்குமாய் நிற்கும் கூத்து இது என உணர்ந்த பிற்பாடு எங்கும் உன் திருக் கூத்தையே பார்த்திருந்து போற்றுவேன். பாடுவன் ஆடுவேன். எல்லார்க்கும் முதலாய மூர்த்தியே என்பேன் என்றவாறு. 6

பொய்யினைத் தவிர விட்டுப் புறமலா அடிமை செய்ய ஐயநீ அருளிச் செய்யாய் ஆதியே ஆதி மூர்த்தி வையகந் தன்னில் மிக்க மல்குசிற் றம்ப லத்தே பையநின் னாடல் காண்பான் பரமநான் வந்த வாறே.

பொய்யை நான் பேணாது தவிரும்படி விட்டு புறத்துப் பூசி வேடங் காட்டி வெருட்டும் புறச் செயலின் மயங்காது அகத்து அன்பாகி உனக்கு அடிமை செய்திட் என் ஐயா நீ அருளிச் செய்வாயாக. என் ஆதியே முன்புள்ள கடவுளர்க்கு எல்லாம் கடவுளே இப் பூமியின் இடத்து மிகுந்த திருவருட் பேற்றிற்கு உரியது என விளங்கும் தில்லைச் சிதம்பரத்து பையப் பைய நின் திருக்கூத்துக் காணும்படி நான் வந்தவாறு என்னே அற்புதம்.

ஒருவரிடம் ஒரு பொருள் கேட்டால் கொடுக்கக் கூடிய வசதி இருந்தாலும் ஐயோ என்னிடத்து இல்லை அது ஆரொருவருடையது என பொய் பேசுதல் இயல்பு. ஒருவரைக் கண்டால் காணவில்லை என சந்தர்ப்பத்திற் கேற்றவாறு மொழிந்து பொய்யே சொல்வர். இதெல்லாம் நாட்டில் மக்களிடம் என்றும் நிலவிடும் செயல், இவை இருக்கும் தனையும் ஒருவர் திருவருள் நிலையில் மேல் போக முடியாது. ஆதலின் பொய்யைத் தவிர விடவேண்டும். அது தான் கரவிலாத வாழ்வு என்பது. உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார் உறவு கலவாதிருக்க வேண்டும் என்கின்றார் இராமலிங்க சுவாமிகள். பொய் இருக்கும் துணையும் கடவுட் தன்மையும் கை கூடாது. அடுத்து புறமலாத அடிமை என்றது வெளியே திருநீற்றுக் குறி எழுதியோகி வேடம் காட்டி காவி உடுத்து பல பல கோலம் செய்தலைக் குறிப்பதாகும். உட்சுவர் இருக்கப் புறச்சுவர் தீற்றி என்ன பிரயோசனம் என யோகசுவாமி சொல்வர். ஆதலினாலே புறத்தே வடிவாய் உடுத்தலை தான் விரும்பவில்லை என்றதால் புறமலாத அடிமை எனப் பேசப்பட்டது. இந்த வகை பொய் நீங்கல் புறத்து வேடம் முதலியனவும் பொய்யே எனக் கொள்வதும் [illegible] 7

பாலாக பெரிய ஆத்மா இருக்கின்றது அதற்கு அப்பாலாக அழிவற்ற பிரமம் இருக்கிறது,

8 : அழிவற்ற பிரமத்திற்கும் அப்பாலாக சிவன் இருக்கிறார். எல்லாமாய் அல்லாவுமாகி அவர்சிந்தனைக் கரியராகிதெரிதற்கரியவராவர். இவரை அறிந்து கொண்டவர் அவருள் கலந்தவுடன் விடுதலை அடைந்தவராவர் இதன்காரணத்தை உணர்பவர்நித்தய ராகின்றார்.

9 : சிவனுடைய வடிவம் கண்ணால் காண்பதற்கு ஒரு பொருளாக இல்லை, ஒருவராதல்அவரை கண்ணால் கண்டவர் இல்லை, ஆனால் அவரை ஒருவர் அறியமுடியும் எப்படி எனில் சந்தேகம் இல்லாத திடப் பட்ட புத்தியாலும் தவறிடாத பிரார்த்தனை யாலுமே அறிய முடியும். இதனை அறிவாரும் அழிவற்றவராவர்:

10 : எப்பொழுது கண் காது மூக்கு நாக்கு உடம்பு உணர்வு எனும் ஐந்து கருவிகளும் தத்தம் தொழிற்பாடு இலாது அடங்கி மனதுடன் தனித்து செயல் அற; அவ்வேளை புத்தியும் தொழிற்படாது போக அந்த நிலையைத் தான் மேலான நிலை எனப்படும்.

''உலகம் என்று பேச அறியாத உருவம் ஒன்றிலாத பருவம்'' என அருணகிரியார் பேசுகின்றார். பிரார்த்தனை என்பது யோகம் பூசை முதலியனவாகும். ஐந்து சுத்தி செய்து அகம் புறம் இறைஞ்சி அங்கியின் கடன் கழித்து அருள் வழிதலை நிற்றல் இவை பிரார்த்தனை வழியுமாகும்.

11 : இந்த வகை பதைப்பிலாத வழி புலன்களை அடக்கிடலே யோகம் எனப்படும். இந்த வகை நாடுபவர் சோம்பல் இன்றி விழிப்புடையவராய் இருத்தல் வேண்டும். (காமம் குரோதம் பகை கோபம் பொருள் அவா தலைப்படாது பாது காத்தல் தான் விழிப்பு என்பதாகும்) ஏன் எனில் யோக மார்க்கம் நன்மையும் தரும் தவறின் தீமையும் விளைக்கும்.

12 . ஆத்மாவைபேச்சால் அறியமுடியாது மனதால் கண்ணால் காண முடியாது இவையன்றி வேறு எப்பொருளால் அதை அறிய முடியும்? அது அதுவாகிய அதுவையேஅறிதலானஉறுதியில் அதுவே நாம் என்று சொல்லும் அவனால் மட்டும் அறியமுடியும்.

13 , ஆன்மாவை (கடவுளை.) உணரப்படுவது முதற் கண் மன உபாதிகள் அடங்கி அது இருந்திடும் இயல் பின்னர் ஆன்மாவின் உண்மை வழியான அதன் அருள் காட்டும் இயபில்.இந்த இரு வகைகளில் ஆத்மா இருந்திடும் இயல்பில் உணரப்படுவோனை ஆன்மாவின் உண்மை பூரண இயல்பிற்கு அது ஈர்த்துச் செல்லும்.

14 . எப்பொழுது நெஞ்சில் உள்ள ஆசைகள் நழுவி விடுகின்றனவோ பின்னர் பிறப்பு இறப்பில் சிக்கும் மனிதன் இறவாமையை அடைகின்றான்.

15 . இந்த உலகில் நெஞ்சம் விரும்பும் பாசங்கள் (ஆசைகள்) அவற்றின் கட்டுக்கள் இந்த உலகில் நீங்கப்படுகின்றனவோ பின்னர் பிறப்பு இறப்பில் பேதுறும் மனிதன் இறவாமை அடைந்து நித்தியனாகின்றான், குருவின் உபதேசம் இவ்வளவே ஆகின்றது.

''நித்தியர் நாம் என்னும் நினைவு தடுமாறாமல்த என்கிறார் யோகசுவாமி.

''பாசமாம் பற்று அறுத்து பாரிக்கும் ஆரியன்'' என குரு உபதேசம் பற்றிய மாணிக்வாசக சுவாமிகள் வாகு மேற் கூறிய உபநிடத சுலோகத்திற்குஒப்பாகின்றது.

16 : இருதயத்தில் இருந்து 101 நாடிகள் உண்டு. அதில் ஒன்று தலையின் உச்சியை மேல் நோக்கி செல்வது. இறக்கும் போது இந்த நாடி வழியால் அந்ழி சீவன் மேல் நோக்கிச் செல்லுமேல் அந்த உயிர் அச்ம்யாமை அடையும். அல்லாது ஏனைய நாடி வழி வெவ்வேறு திசையில் சென்றால் அத்தகையோர் மீண்டும் இந்த உலகில் பிறக்கின்றார்.

இங்கு குறிப்பிட்ட உச்சந்தலை நாடி வெடித்துச் செல்பவரே முனிவர். யோகசுவாமி செல்லப்பாசுவாமி இவர்கட்கு இந்த நிலை இருந்ததாக அருகு நின்றவர் பார்த் திருந்தவர் சொல்லக் கேட்டதுண்டு. அவ்வேளை உச்சந்தலைப் பக்கம் வெடித்த ஓசை கேட்கப்படும்.

17 . புருடன் (ஆத்மா) பெருவிரல் நீளத்தின் மேல் இல்லாதது. ள்ளுக்கு உள்ளாய்த் தான் ஆவது. எல்லா மனிதருடைய இருதயத்திலும் உளது. ஒரு மனிதன் அதைஇந்த உடம்பில்நின்றும் திடசித்தமுடன் பிரித்தெடுத்துக் கொள்ளட்டும்.எப்படி எனின் ஒரு மிக மென்மையான புல்லுக்குள் இருக்கும் குருத்தை அதன் நின்றும் பிரித்தெடுத்தல் போன்று அத்தகையோன் அதுவேதான் என்றும் மிகப் பிரகாச முடைய தென்றும் அழிவற்ற தென்றும் கண்டு கொள்ளட்டும். நாச்சிகேதனே! நீயும் அதுவேயான ஒளி.நீ என்றும்அழிவற்றவன்.

18 . இந்த அறிவு உபதேசங்கள் கால முடிவின் கடவுளான இயமனால் நாச்சிகேதனுக்கு உபதேசிக்கப் பட்டபின் நாச்சிகேதன் எல்லாமனஅழுக்குகளில் நின்றும் நீங்கப் பெற்று சாதலை நீங்கி பிரம நிலையைப் பெற்றான். அவனைப் போன்றே உண்மை அன்பு கரவிலாத வாழ்வு ஞானதாகம் உடைய ஏனைய உத்தமர்கள் இதனைக் கரிசனையுடன் உணர்வார்கள் நித்தியத்துவம் அடைவர்.

உபநிடத தோத்திரம்

ஓம் பிரமம் எங்கள் இருவரையும் காப்பாற்றட்டும். எங்கள் மீது அறிவிற்குரிய பலாபலன்களை பிரமம் தந்து நிற்கட்டும். நாங்கள் இருவரும் நல்அறிவையும் சுகவாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தினார் திகைத்துநாளும் மாண்பலா நெறிகள்மேலே கனைப்பரால் என்செய் கேனோ கறையணி கண்டத் தானே தினைத்தனை வேதங்குன்றாத் தில்லைச்சிற் றம்ப லத்தே அனைத்துநின் இலயங் காண்பான்அடியனேன்வந்தவாறே.

என் மனத்தினார் திகைத்துத் திகைத்து மாண்பிலாத நெறிகள் (விழா பாராட்டு கொண்டாட்டம்) மேலே கனைத்துக் கொள்ளும். அதன் மீது இறுமாந்திருக்கும் இது மனத்தின் தன்மை. என் ஈசா இதற்கு நான் என் செய்வேன். நஞ்சு உண்டகண்டம் உடைய கடவுளே. தினைத் துணையேனும் வேதம் ஓதல் குறைவுபடாத தில்லைச் சிற்றம்பலத்து முழுவதுமாய் எங்கும் நிரம்பிய நினது மூல இல்யம் காணும்படி அடியனேன் வந்தவாறு என்ன வகையாக உளது.

மனம் எப் பொழுதும் வேடிக்கை விண்ணாணம் வீண் பொழுது போக்கு வீணருடன் குழுமி இருந்து புறங் கூறல் அவதூறு இவற்றைச் செய்தலில் உற்சாகப் படும், இதனால் அதை மனத்தினார் உண்மை உணராது திகைத்து மாண்பிலாத ஒழுக்கங்களில் கனைப்பர், மனதிற்கு விழா என்றால் காணும், போட்டி எனினும் பரிசுவழங்கல் பாராட்டுதல் பட்டம் பெறல் இவையான மாண்பற்ற செயல்களில் மிகு உற்சாகம் கொள்ளும். அதனை கட்டுப் படுத்தல் இயலாத காரியம், ஆதலால் ஈசனையே இந்த மனத்தின் சங்கடத்தை நீக்கிட நீயே அருள் தருவாய் என வேண்டுதல் காண்க.

வேதம் ஓதல் தினைத்தனையும் குன்றாததே தில்லை வேதம் ஓதல் யாகம் செய்தல் நித்திய கருமங்களாக அங்கு நிகழ் பெறுவன, 8

நெஞ்சினைத் தூய்மை செய்து நினைக்குமா நினைப்பி யாதே வஞ்சமே செய்தியாலோ வானவர் தலைவ னேநீ மஞ்சடை சோலைத் தில்லை மல்குசிற் றம்ப லத்தே அஞ்சொலாள் காண நின்று அழகநீ யாடுமாறே.

எனது அழுக்குடைய நெஞ்சைத் தூய்மை செய்து அதன் பின் உன்னை நினைகும் வகை நினைப்பியாது இத்தனை நாளும் நீ வஞ்சனையே செய்து விட்டாய். தேவர்கட் கெல்லாம் தலைவனான என் இறைவா ஏன்இதைச் செய்தாய் மேகங்கள் வந்து படியும்படி உயர்ந்த சோலையாகிப் பரந்து எங்கும் பசுமை விளங்கும் தில்லைச் சிற்றம்பலத்து அழகிய மொழிபயிலும் உமை அம்மை காணும்படி நின்று என்ன அழகாக நீ ஆடுமைாறு என்ன அற்புதம்.

நெஞ்சம் தூய்மைப் பட்டால் அன்றி திருவருள் பேறு பின் இல்லை, கோழமை பொய் காமம் குரோதம் மதம் முதலிய குணங்கள் நெஞ்சைப் பந்தித்தால் அவை அழுக்காகின்றது. இவை இருக்கும் துணையும் நெஞ்சில் நினைப்புக்கள் வேறு வேறாக அமையுமே அன்றி உண்மைக்கு நெஞ்சம் வராது. ஆனதினாலே தூய்மை இல்லாது வாழ்ந்த காலத்தையும் நெஞ்சம் இன்று தூய்மைப் படலாலே ஆனந்தமானதிருக்கூத்தின் தரிசனத்தையும் இன்று உணர்ந்து இவ்வளவு காலமும் நீ எனக்கு வஞ்சனை செய்து விட்டாயே எனக்கேட்கின்றார்.

நெஞ்சம் தூய்மைப் பட நினைப்பிப்பது திருவருள். களவெடுப் போனை களவெடுப்பது தவறு என உணர்த்துவது திருவருள் பொய் காமம் புறங் கூறல் பிறன் பொருள் கவர்தல் ஏமாற்றம் இவையாவும் நிகழ நிகழ அவை அவை தவறு எனக் காண்பிப்பது கூத்தரின் திருவருள் ஆனதினால் நினைக்குமாறு நினைப்பியாதே! எனக் கூறுகின்றார். நெஞ்சம் தூய்மைப் பட்டால் அன்றி நல் நினைப்புத் தோன்றாது. 9

மண்ணுண்ட மால வனும் மலர்மிசை மன்னி னானும் விண்ணுண்ட திருவு ருவம்விரும்பினர் காண மாட்டார் திண்ணுண்டதிருவே மிக்க தில்லைச்சிற் றம்ப லத்தே பண்ணுண்ட பாட லோடும் பரமநீ யாடு மாறே.

மண்ணை உண்டு காத்த திருமாலும் தாமரை மீதிருந்த பிரமனும் வானமெலாம் தன் அகத்து அடக்கி உண்டு நின்றாடும் இந்த அற்புதத் திருவுருவம் காண விரும்பினார் ஆனால் காணமாட்டார், அது அவரால் முடியாது. திண்மை விளங்க ஓங்கிய தில்லைச் சிற்றம்பலத்து பண் முழுவதும் நிறைந்த பாடலுடன் பரமனே என்ன அற்புதமாக நீ ஆடுகின்றாய்.

தம்முன் தோன்றிய சோதியை திருமால் பன்றியாயும் பிரமன் அன்னமாயும் தேடிக் காண முற்பட்டார், அது இங்கு உண்டு. ஆனால் அவர் காண விரும்பினும் அவர்களுடைய நிலையில் காணமுடியாது ஏனெனில் மனிதப் பிறவி பெற்றால் அன்றி அவர்க்கு இது எய்தாது கிட்டாது என்றதால் விரும்பினார் காணமாட்டார் என மொழிகின்றார். விண்ணுண்ட திரு உருவம் என்றது வானமெலாம் தன் அகத்து அடக்கிய திருவுருவம் எல்லா உலகமும் தனதாக்கிய அறபுதத் திருவுருவம் என்றவாறு. காணத் தாகம் கொண்டார்க்கும் பொய் நீங்கி நெஞ்சம் தூய்மைப்பட்டால் அன்றி காணமுடியாது என்பது குறிப்பாகும். அற்புதமான பாடல்கள், 10

வையும் தைரியத்தையும் பெறுவோமாக. நாம் படித்திடும் பலவும் உண்மையை உணர்த்தட்டும் நாங்கள் ஒருவர் மீது ஒருவர் எக்காலமும் மனக்கசப்பு ஏற்பட்டுக் கொழ்ளா திருப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கதா உபநிடதம் முற்றும்

சப்பட்டைச் சாமியள் பற்றி நாம் கருதவில்லை. ஆலயங்கள் அருள் நெறிக்கு உயரலையே நாம் கூறுவோம்

அருகில் உள்ள எம்பிரான் திருநாவுக்கரசர் தேவாரத்தை சாதாரண பொது அறிவுடைய எவரும் விளங்குவதென்றால் கோயில் சென்று நாம் என்னபெறலாம்என்பதுவெளிப்படையாகப்புலப்படும்.

நமது நாயன்மார்கள் யாவரும் நமது ஆலயங்களை அருள் நெறி பெறற்கும் கடவுளைக் கண்டு கொள்ளற்கும் தெளிந்த முத்தி நிலையைப் பெறற்கும் உரிய இடமாகவே கருதிப் போற்றினார்கள்.

கோயிலைச் சென்று தரிசித்து தாம் வேண்டியதைப் பெறுவது முத்தி நிலையையும் அங்கு சென்றே பெறுவதாக நாயன்மார் காலத்து நிலை இருந்தது.

ஆனால் இந்த நிலை கால நிலையில் வழுவி வழுவி கோயில் சமயப் பிரசாரத்திற்கும் திருவிழா கலியாணம் இசை நிகழ்ச்சி இவை வைத்திடும் இடமாகக் கருதப்பட்டு மிகவும் கீழ் நிலைக்கு கொண்டு வரப்பட்டது. ஆனதினால் கோயில் என்ற நிலைமாறி தற்புகழ்ச்சியின் பெருக்கத்திற்கு வாய்த்த இடமாக கோயில் வந்துளது. நாம் இதற்கு என் செய்யலாம். இன்றைய அவல நிலைக்குயார்காரணம்?

நாவலர் ஏதோ சைவம் காத்தார் என்று கூறுகிறார், ஆனால் நாவலர் கோயிலை ஓர் பிரசார மேடையாக்கி அதன் உயர்வைக் கெடுத்துக் கொண்டார் என்றே நாம் சொல்வோம். பலர் என்னை இகழ்ந்தாலும் உண்மை இதுவேயாம்.

தயவு செய்து நான் சொல்வது தவறில்லை பக்கத்தே உள்ள தேவாரம் விளக்கும்.

நாவலர் பிரசாரத்திற்குரியரானாரே ஒழிய தொண்டிற்குரியவர் அல்ல. நாவலர் கோவில் சென்றதே சில கால் சிவிகையிலாம். அங்கு சென்று அவர் புராணபடனமும் பிரசங்கமும் செய்தனரே அன்றி திருத்தொண்டு ஒருக்காலமும் செய்தது கிடையாது.

கோயில் வீதியை திருநாவுக்கரசர் கை உளவாரப் படை கொண்டு செருக்கினார். நாவலர் செருக்கினாரா? எந்தக் கோவிலில் அவர் செருக்கினார். அவர்க்கு விழா எடுத்து ஐந்தாம் குரவர் எனப் போற்றும் பேதையர் கூட்டமே இதை நீ காட்டு. செறிவுடை அடிமை நாவலர் எங்குசெய்தார்.

அடுத்து எத்தனையோ மடாதிபதிகள் ஒளிச்சங்கச் சுவாமியள் பேதமையான கருத்துக்களை நாட்டில் பரப்பி பலரை ஏமாற்றுகின்றனர். அவரால் ஏமாற்றப்பட்டவர் பலரும் பிறரை தாங்களும் அவர் வழிச் சாமி என்றும் தாம் அருள் பெற்றோம் என்றும் ஏமாற்றுகின்றனர். உண்மையில் இந்தச் சங்கங்களை சமித்திகளை ஆதீனங்களை உண்டாக்கும் சாமியள் எல்லாம் சப்பட்டை போல்வது

சைவநெறியில் சங்கம் என்ற வகை பேச்சே இல்லை. சைவ நெறியில் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் பாதங்களே உண்டு. தயவு செய்து உரும்பிராய் ஒளிச்சங்க சாமியளை நம்பாதீர்.

கலியாணம் கடவுள் சந்நிதானத்தில் செய்வது தருமமா?

நடுஇராத்திரியில் கோயிலில் கலியாணம் செய்யும் சண்டாளப் பிராமணா! தயவு செய்து உன் பேதமையை நீ உணர். சிவதருமத்தை விளங்கு அதன் படி முதல் நீ ஒழுகு! பிறரையும் நல் வழிப்படுத்து.

எம் சைவநெறியில் உண்மையிலாத போலித்தனமும் வஞ்சனையும் என்று பெருகிக் கொண்டதோ அன்றே தமிழினம் சீர்கெட்டு அடிமையாகி இன்றும் சுதந்திரம் அடைய முடியாது தவிக்கின்றது. பிராமணனே! நீ எல்லாம் கற்றாய் கற்றவாறு ஒழுகுவாய் என்றதால் எமது மக்கள் உன்னை மேலான குலத்தவர் என மதித்து உன்னை உயர்வுடன் பேணினர். வேதங்களை நன்கு கற்று அதிற் சொல்லிய மிக நுணுக்கங்களை நன்கு உணர்ந்து ஏனைய மக்களை அதன் தூய வழி ஒழுக வழிப்படுத்துவோன் நீ என்றதால் உன்னை புரோகிதர் என்றும் சிறப்பித்தனர். பேதையே இன்று புரோகிதர் என்ற சொல்லின் விளக்கம் தெரியாது நீ ஓர் தொழிலாளி என்றே கருதிக் கொண்டாய்!

உனது சாதி அல்லாத ஏனைய மக்களை நீ இரண்டாம் சாதி என நீ பெரியவன் மற்றவன் சிறியவன் என்றும் எண்ணிக் கொண்டாய்; பொய் சொல்லிக் காசு பறித்து பூசை செய்ய முற்பட்டுக் கொண்டாய்! கோயிலில் களவெடுப்பதுவும் தோஷமில்லை என்ற அளவிற்கு நீ வாழமுற்பட்டுக் கொண்டாய். இன்று கோயில்களில் நடந்த களவுகளில் உங்கள் குலத்தவரில் சிலர் சம்பந்தப்பட்டவர் என்பதை உலகம் அறியும்.

வெளிப்படையாக பிடிபட்டது போக இரகசியமாக நீங்கள் செய்து கொண்ட திருகுதாளங்கள் அநேகம். பிற கோயில் பொருளை களவாகக் கொண்டு வந்து நீ கோயிலும் கட்டி அதில் கலியாணமும் செய்கிறாய். பல பேருக்கும் உனது பழியான செயல்கள் விளங்காமல் இலது என நீ நினைக்காதே!

பலருக்கும் தெரியும். ஆனால் சண்டாளா! மனிதர்கள் பலர் எரியும் வீட்டில் பிடுங்கினது மிச்சம் என்ற அளவிற்கு ஏதோ வாழ்வில் தங்கள் வசதியை முன் வைத்து கோயில் போனால் என்ன குளம் போனால் என்ன நாங்கள் வாழ்ந்தால் காணும் என்ற அளவிற்கு துணிந்து கொண்டனர். அதனாலே அறியாமை மிகுந்த மக்கள் கோயிலைத் தமது வீடு போல் கருதி கலியாணம் செய்யத் தலைப்பட்டனர். அவர்களது அறியாமையை உணர்ந்து அவர்களிடம் கோயிலின் புனிதத்தை எடுத்துக் கூறி இறைவன் இருப்பிடத்து இவை போன்ற செயல் கலியாணம் கூத்து வில்லிசை இவை ஆகாது எனச் சொல்ல வேண்டியவன் நீ அல்லவோ! நீ என் சொல்வாய்! நீ கற்றுள்ளது எனக் கூறப்படும் ஆகமங்களில் எங்காகிலும் கோயிலில் மனிதர்க்குத் திருமணம் செய்யலாம் எனக் கூறப்பட்டுள்ளதா? நீ வடமொழியாளன் என்றும் நாங்கள் தென்மொழியாளர் எங்கட்கு ஒன்றும் தெரியாது என பல பல சுலோகம் உன் வசதிப்படி அந்தப் புத்தகத்தில் உளது இந்தப் புத்தகத்தில் உளது எனச் சொல்லி ஒன்றும் அறியாத மக்களை ஏமாற்றினாய். எவ்வளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமாக உங்கள் குலம் உண்மை வழி ஒழுகுதல் கடினமாக இருந்த படியால் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வாறு பலதையும் உன்விருப்பப்படி மாற்றி அமைக்கத் தலைப்பட்டாய். அன்றுள்ள தக்கனிலும் பார்க்க மிகு மோசமான வழி போதையே உன் குலம் இன்று நடக்கத்தொடங்கி விட்டது:

காமாதி குணங்கள் ஏல்லாம் கட்டவிழ்ந்து இருக்கும் கடவுள் சந்நிதியில் காம நீர் வடிய கூலியாணமா செய்வாய். மோடனே மூர்க்கனே கடவுள் இயல்பு பற்றி உனக்கு ஏதும் தெரியுமா? தெரிந்தால் இப்படிச் செய்வாயோ?

காமாதி குணம் எல்லாம் கடந்து பூரணமான கருணை உடைய பகவான் இருக்கும் இடத்து இந்த போதைச் செயலைச் செய்ய அறிந்தவன் புரோகிதன் சமயகுரு ஆசாரியன் எனச் சிறப்பிக்கப்படும் நீ இணங்கலாமோ? போதையே இப்படிக் கலியாணம் செய்து காசு உழைத்து கார் வேண்டி கார் பிடித்து சினிமாப் பார்த்து மோட்டார் சயிக்கிள் ஓடி கொண்டாட்டம் வைப்பதிலும் நீ வேறு வழி பல வகை சிலரைப் பாவித்து சில செயலுக்கு இணங்கப் பண்ணி நல்ல காசு வேண்டலாம். இந்த மாதிரிச் செயல் இன்று உங்களது குடும்பங்களில் நடவாமல் இல்லை. பல இடமும் நடைபெறுகின்றது என்பதை மறுக்க முடியாது. பொது மக்கள் பலர்க்கும் இவை தெரியும்.

உங்கள் குலமே வாழ வேண்டும் எமது சைவநெறி ஓங்க என்றுல் என திருஞானசம்பந்தப் பெருமான் பாடியருளினர். சைவத்தின் உண்மை நிலை இது தான் என வைகை ஆற்றில் ஏடிட்டு காட்டி நீரில் எதிர்நீந்தோடச் செய்து சைவநெறியின் உண்மை இது தான் என உலகம் கைகூப்பித் தொழ காட்டியருளினரே. திரும்ப சீகாழியில் வந்து தன்னை ஆண்டருளிய பெருமானைக் கும்பிட்டு பாடிதிம்பொழுது அன்று சமணர் முன் என்னைக் கைவிடாது காத்தருளிய கடவுளே எனப் போற்றினரே. அப்படியாக அவர் வாக்கு அநுள் உடையுளன போதையே ஒரு கணம் சிந்திப்பாயா?

எவ்வளவு காலமாக கடவுள் இருப்பிடங்களை உங்கள் வசதிக் கேற்ற வீடு போல் பாவித்தீர்கள்?

இறைவன் பிரத்தியட்சமாகத் தரிசனம் தந்த இடங்களில் இன்று எங்காகிலும் ஓர் தலத்தில் உண்மைப் பிரத்தியட்சம் வெளிப்படையாகக் காட்டப்படுமா?

சில கோவில்களில் தீங்கு செய்வதற்கு கூசாத பிராமணர்கள் நடு இராத்திரியில் கலியாணம் செய்கின்றனர்.

ஓர் ஆலயம் அத்த சாமம் முடிந்து கதவும் திருக்காப்பிட்டுக் கொண்டால் பின்னர் எக்காரணம் கொண்டும் கோவில் அகத்தோ புறத்தோ ஏதும் செயல் நிகழக் கூடாது. இது சிவதருமம். சிவனுல் உலகு நலம் பொருட்டு உபதேசிக்க பட்டவையே சிவதருமம் எனப்படும்.

ஒரு கோவில் அத்த சாமப் பூசை ஒழிந்து திருக்காப்பிடுவதற்கு உரிய நேரம் உண்டு! அதை நினைத்தபடி மாற்ற யாருக்குமே முடியாது! அப்படிச் செய்தால் அது சிவதருமத்தையும் சிவனையும் கோயிலையும் அவமதிப்பதாகும்.

ஒரு கலியாணம் கோவிலில் நடைபெற்ற போது ஒருவர் அங்கு அந்த கலியாணத்திற்கு வந்திருந்தாராம். அவர் ஓர் பிரமுகர் கலியாணம் காணவந்தவர்க்கு வெற்றிலை கொடுபட்டது. அந்த வெற்றிலையை அவர் போட்டுக் கொண்டு எட்டித் துப்பினராம். அந்த துப்பல் வாகனக் கொப்பில் போய் பட்டுக் கொண்டது: அதைப் பார்த்திருந்தவர் மிகு வேதனைப்பட்டார். அவர் இதை என்னிடம் தெரிவித்து 'ஐயா வாகனக் கொம்பை இறைவனுடைய பொருள் என் நாம் அதைத் தொட்டுக் கும்பிடுவோம். இப்படி அவர் அதன் மீது துப்பினர்! அவர் ஓர் பிரமுகராதலின் அவருடன் எதிர்த்துப் பேச எனக்கு மனம் எழவில்லை, என்றார். இவர் ஓர் பிரபல அரசாங்க சேவையில் இருந்து இளைப்பாறியவரும் தற் போது பிரபலவியாபார நிலையத்தின் நிர்வாகியுமாவர்.

இன்னுமொரு முதலாளி என்னை நோக்கி எங்கள் ஊர்ப் பிராமணன் நடுச்சாமத்திலும் கோயில் திறந்து கலியாணம் செய்புரான். ஐயோ இது கோயில் அல்லவோ இதில் இப்படியும் செய்யலாமோ என பிராமணன் எண்ணுகிறான் இல்லை. அவன் எது செய்தாலும் எதைக் களவெடுத்தாலும் தனக்கு காசு வந்தால் காணும் என்கின்றான். நீங்களும் உவர் பிழையைக் காட்டக்காட்ட அவன் திருந்துவதை விடுத்து இன்னமும் இன்னமும் கூடக் கூடத் துணிந்து செய்புரான். எப்ப ஐயா இவன் திருந்துவான்? எனக் கேட்டார்.

நான் சொன்னேன் பெருவாரியும் அந்தணர் கோயிலை மதியாமல் நடந்து நினைத்தபடி கருமம் செய்ய மக்களும் பார்த்துப் பார்த்து மதிக்கிறார் இல்லை நான் என் செய்ய என்றேன்.

இன்றுள்ள இளம் சமுதாயம் கோயிலை தாம் திருவிழாச் செய்து பல தூரம் வரை ஒலிபெருக்கி பூட்டி 'அட்டமத்துச் சனியன்' 'அடங்காப்பிடாரி' 'புழுகர் பொன்னையாண்ணை' முதல் நாடகம் நகைச்சுவை வில்லிசை வைத்து பெரும் அலங்கோலப் படுத்துகின்றார். ஒரு திருவிழா நடக்கும் ஒரு கோவிலாதல் ஒரு இளைஞன் தான் மதிப்பாக சைவ ஆசாரமுடையனாக நடந்து கோவிலை வழிபடுவானே? இல்லவே இல்லை. தொண்டு செய மனமிலாது மிண்டே செய்கின்றனர். இவை எலாம் யாருடைய பிழையால் வந்தது? அறியாத பிள்ளைகட்கு நல் வழிப் படுத்திட வேண்டியவிதி காட்டத் தவறிய உனது பிழையால் போதைப் பிராமணை வந்துளது. உனது பிள்ளை பெண்கள் முன்னிலையில் நகைச்சுவை வில்லிசை வைத்திட நீயும் பார்த்து மகிழ்ந்து அந்தக் காசு வேண்டி நீயும் நடவாதன நடந்து கொண்டாய் அல்லவோ?

கோயிலில் கலியாணம் செய்யும் பிராமணர்களது பிள்ளைகள் எங்காகிலும் ஒரு வீட்டிலாதல் வேத நெறிக்குரியவராக இருக்கின்றார? வீதி எல்லாம் சினிமாப்பாட்டுடன் சைக்கிளில் ஓடுவர். சிலருடைய பிள்ளைகள் சைக்கிளில் றேடியோ வைத்து பாடிக் கொண்டு போகிறார். சிலருடைய பிள்ளைகள் நட்டா முட்டித்தனம் மிகுந்தவராக காடையராக உளர். சிலர் வீடி சிகரட்டும் பற்றுகிறார்.

அந்தணை இந்த ஒழுக்கம் தானை உனது சுயதர்மம்? தயவு செய்து இதைச் சிந்தி. நீ கோவிலில் நடந்து கொள்ளும் முறைகள் எங்காகிலும் சிவதருமத்திற்கு இயந்தனவா? அறத்திற்குரிய உன்னிடம் மறம் ஒரு போதும் இருக்கக் கூடாதே. பெரும் பாலும் உனது தவருன நடத்தையாலும் அதைப் பார்த்து பிழைகள் பல செய்யத் துணியும் மக்களாலும் கோயில் அருள் நெறிகள் தவறின.

ஒரு நாள் மல்லாகம் பிள்ளையார் கோவிலில் கலியாணம். மாலை 7மணி முன் மண்டபத்து திருமணத்திற்கு ஒலிபெருக்கி.வாசலை மறைத்து ஒரே சனம், அவ்வழியால் சென்ற நீதிபதி கோயிலில் கலியாணம் பிழை என்றார்

தயவு செய்து எம் தமிழினம் வாழ வேண்டுமென நீ கருதினால் கோயிலில் கலியாணம் முதல் பாதகச் செயலிற்கு இணங்காதே! உன் குலம் பொளாதாரத்தால் உயர்வதிலும் அறநெறி அருள்நெறியால் உயரட்டும். அப்பொழுது தான்சமூகம் நன்மைப்படும் தமிழினம் உய்யும்.

வண்ணார்பண்ணை வைத்தீசுவரன் கோவிலில் புனிதமற்ற பரிதாபநிலை

கோவில் வீதிப் பிரகாரத்தூணில் நாவலர்க்கு விழா!ஆலைகோயில் உள் நிலையை அவதானித்தால் கவலையே பெருகுகின்றது. சிவ தரும நெறிப்படி அர்ச்சகர் ஒழுகத் தவறுகின்றனர். நிர்வாகம் பற்றி பேச அஞ்சுகிறோம். செய்திகள் அருவப்பாய் உள்ளன இதுவா சிவன்கோயில் நிர்வாகம்.

வண்ணார் பண்ணை சிவன் கோவில் யாழ்ப்பாண குடா நாட்டில் என்ன இலங்கை நகரில் மிக்க வருவாய் உடைய கோயிலாகும்.

அக்காலத்தில் இக்கோயில் தாபித்தோர் ஏராளமான நிலன்கள் காணிகள் இக்கோயிலில் ஏதும் தளர்விலாது பூசைகள் கிறந்திட மான்யமாக விட்டுச் சென்றுள்ளனர்.

அக்காணிகள் தற்போதுள்ள நிர்வாகத்தால் சில விற்கப்பட்டும் சில வாடகைக்கு கொடுபட்டும் சில வாடைக்கு கொடுத்த காணிகள் கட்டிடங்கள் அவை ஓர் கோவில் காணி என்ற வகையாக கொடுபட வேண்டிய வாடகைப் பணமும் சரிவரக் கொடுபடுவதில்லை. இது மட்டன்றி தற்போது கோவில் நிலையைப் பார்த்தால் அது ஓர் புனித தலம் என்று சொல்வதற்குரிய வகையிலாது வீதியிலும் உட்கோயிலிலும் தூய்மை இல்லை.

வெளி வாசலில் சுவாமி உலாவரும் சப்பறம் தேர் இவைகள் நிற்கும் இடத்தை நோக்க அதுவும் மழை நேரத்தில் நோக்கினுல் பெரும் கவலையாக இருக்கும்.

கோயில் உள்ளாக தூய்மை இல்லை. அங்கு நாற்றம் எடுக்கும் படியே உளது. சுவாமிகட்கு சாத்திட ஓர் ஆனவஸ்த்திரம் இல்லை அங்கு சுவாமிகள் ஆடிக் கொண்டிருக்கின்றன. வேண்டிய வகைபுரியபணமிருந்தும் மனமில்லை வகை இல்லை.

ஒழுங்காக ஒரு ஒலிபெருக்கி பிடித்து பிரசங்கம் ஒழுங்காகச் செய்வார்கள். ஆதினங்கள் ஆஸ்தான வித்துவான்கள் அரசியல் காரர் பலரும் சொற்பொழிவு பிரசங்கம் நிகழ்த்துவார்.

முன்னுக ஓர் கோபுரம் கட்டிட ஆரம்பிக்கப்பட்டு அடித்தளத்துடன் நிற்கின்றது. அதைப் பற்றி கவனம் செலுத்திட ஆரும் இல்லை.

ஆறுமுக நாவலர் முன்னர் இந்தக் கோவிலில் பிரசங்கம் செய்தவராம். அவர் மருகர் இங்கு இராமயணம் படித்தவராம். படிக்துப் பயன் சொல்லும் போது பார்வை எல்லாம் எங்கோ விழுமாம். அந்தவகை பார்வை எங்கோ விழகாலனது பார்வை அவர் மீது இராமயணம் படிக்கும் வேளையில் விழுந்ததாம். இது நாவலர் பரம்பரை சரித்திரங்கள்.

இப்படியாக நாவலர் பரம்பரை சமயப் பிரசாரம் செய்திட அதனுலே வைத்தீஸ்வரன் கோவில் இரண்டாம் வீதி மண்டபத் தூண் ஒன்றில் நாவலர் நினைவுச் சின்னம் அமைத்து அதற்கு நூற்றாண்டு விழாச் செய்தனராம் திருவாளர் சிவசுப்பிரமணியம் ஐயா தலமையிலான நாவலர் விழாச்சபை.

அடுத்து சோமசுந்தரம் ஐயா தலமையிலான இன்னுமொரு விழாச் சபை முன்னவர் தூணில் நாவலர்க்கு விழா எடுத்தால் இவர்கள் நாவலர் பேரில் சோம வாரத்தன்று அபிடேகம் செய்து பின்னர் கூட்டம் நடத்தி விழாச் செய்தனரம்.

சரியை நெறியிலே நாவலர் சரி பிழை பேசித்திரிந்தவர். அதற்கு மேலாக கிரியையில் சிவ பூசை நெறியில் ''ஐந்து சுத்தி செய்து அகம் புறம் இறைஞ்சி அங்கியின் கடன் கழித்து அருள் வழி நின்று'' என்பது நாவலர்க்குத் தெரியுமோ அல்லது அதன்படி ஒழுகி இருப்பாரோ என்பது சந்திர தீபத்திற்கு எழுகின்ற சந்தேகம்.

நாவலர்க்கு பிள்ளைத்தமிழ் பல பல நினைவு மலர் நூற்றுண்டு மலர் எல்லாம் தாராளமாகக் கிடைக்கின்றன. நன்று நன்று நாவலர்க்கு இவ்வளவு பெருமைகளை நமது யாழ்ப்பாணத்தவர் செய்ய நாமும் இறும்பூது அடைகிறோம். என்னென்றாலும் பெரிய புராணம்கந்தபுராணம் அச்சேற்றியவர். ஆனல் ஐந்து சுத்தி செய்தல் அகம் புறம் இறைஞ்சல் அருள் வழிதலை நிற்றல் என்ற வகையில் அகத்தில் சிவனை வழிபட்டால் அகத்தில் சிவனைப்போற்றியோரது நிலை போல நாவலர் நடத்தை அவர் பற்றிய வரலாறுகளில் தெரிய வில்லையே!

உதாரணமாக திருநாவுக்கரசரது முன்நந்த தேவாரத்தைத் ஓருக்கால் அல்ல பல தடவை திரும்பத் திரும்பப் படியுங்கள். அதில் அவர் என்ன சொல்கின்றார் கூர்ந்து கவனியுங்கள். மாண்பலா நெறிகள் மேலே மனத்தினர் கனைப்பர் நாளும்! அடுத்து புறம் அல்லது அடிமை செய்ய! அடுத்து நெஞ்சினைத் தூய்மை செய்து நினைக்கு மாறு நினைப்பியாதே இவைகளின் கருத்து யாது! இன்று நாவலரைக் கடவுள் போல் நாவலர் போல் நமக்காள் இல்லை என்று பேசிடும் பண்டிதமணிகள் பத்தி ரிகை ஆசிரியர் பதில் தரட்டும்.

ஏதோ சந்திர தீப ஆசிரியன் அவன் ஓர் விசரன் அவன் விசரில் எழுது வதை விட்டுட்டு உங்கடை அலுவலை பாரும் அவன் கிடக்கிறான் குடிகாறன் நமக்கு ஊத்தடா கிளாசில் என்றவகை சமயம் வளர்த்து மேடை நின்றுவீரம் பேசி மிளிர்ந்து தளிர்ந்து சபை கண்டு குளிர்ந்து குழைந்து உள்ளம் உருகிய நீர் பெருக்கும் வித்துவான்கள் பெரும் பெரும் செஞ்சொற் கொண்டல்கள் புலவர்கள் பதில் தரட்டும்.

மேற்கூறிய நாவுக்கரசர் வார்த்தைகளில்ஒன்றில் ஒருதலையங்கம் பற்றியாதல்ஓர் கட்டுரை தரட்டும். அந்தத் தலையங்கங்களுக்கு அமைய நாவலரில் சிறிதளவேனும் நெறிகாணப்பட்டது என்று வெளிப்படையாக ஆதார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரங்காட்டி எழுதுநட்டும். பண்டிதமணியே முடியுமாஞல் பகர்ந்துபார். அவரது பரிவாரப் பண்டிதர்களே! அணுக்கப் புலவர்களே மிக நுணுக்கமாக இதற்கு நீங்கள் பதில் தாருங்கள். ஏனெனில் நீள நீங்கள் ஏதோ கற்றுள்ளீர்கள் என்ற முறையில் சைவ சீலங்களே முற்றிலும் மறைத் திடற்கு நாம் இனி இடங்க கொடுக்கோம். ஆறுமுக நாவலர் சரியை நெறியில் சரி பிழை பேசிக் கொண்டிருந்தாரே ஒழிய அருள்வழியில் அவர் ஒருபோதும் இல்லை என்பது எமது துனிபு!

அவர் சைவநெறியை விளக்கி கிறீஸ்தவ சமயத்தை எதிர்த்து வாதாடி சைவ நெறியை வளர்த்துள்ளனர் எனப் பேசுகின்றீர். இதோ எந்த ஒரு சைவனும் புறச் சமயங்களே எதிர்க்க கூடாது என திருவாரூர்ப் புராணம் தெரிவிக்கிறது அதன் அர்த்தமென்ன! அவர்கள்வாதிடவந்தால் அவர்களுடன் வாதாடி அவர் கொள்கை தவறு என்று அருள்வழி உணர்ந்து நிலைநாட்டப்படல்தான்சிறந்தது

திருஞான சம்பந்தர் சமணருடன் வாதுசெய்திடும் போது முதற்கண் திருவருள் சம்மதம் கேட்கிறார். நோக்கிட விதியிலாரை நோக்கி நான் வாது செய்யத் தீக்கனல் மேனியானே திருவுளம் அறியேன் எனக் கேட்டதாக பெரியபுராணம் தெரிவிக்கின்றது. அடுத்து சம்பந்தரும் தீதில்வாது செய்யத் திருவுள்ளமே என தமது தேவாரத்தில் கேட்கின்றாரே ஏன் அப்படிக் கேட்க வேண்டும்? நேரடியாக வாது தொடங்கி இருக்கலாமே?

சம்பந்தப் பெருமான் அகவழி பாட்டின் உயர்வு பெற்ற வகையால் சமணர் வைத்த நெருப்பை பாண்டியன் மேல் ஏவச் செய்தார். அடுத்து அகவழிபாட்டின் உறுதியே சம்பந்தரை தீதில் வாது செயத் திருவுள்ளமே எனக் கேட்க வைத்தது.

ஆதலினுலே சைவம் வளர்த்தல் அகத்துய்மையும் அருள் வழியும் சிறந்தவரால் முடியுமே அன்றி சரி பிழை பேசிச் சண்டை பிடிப்போரால் அது முடியாது. இது உண்மை. நாவுக்கரசர் சம்பந்தர் சுந்தரர் மாணிக்கர் வழி எல்லாம் அகவழிபாட்டின் புனிதம் நிறைந்தது. அகவழிபாடு தருமத்தையை அன்பு புலன் அடக்கம் பரவனே தியானம் தவம் உடையோர்க்கே கைகூடிடும்.

நாயன்மார் வரலாறும் வழியும் அகவழிபாட்டினுல் முற் கொண்டதாகவே அமைந்தது. இதை நன்கு நம்மக்கள் உணரவேண்டும். மேடை அக வழிபாட்டை வளர்க்காது. தொண்டு தான் வளர்ப்பது.

ஆகவே ஓர் ஆலயம் சிறப்புற வேண்டு மேல் முதலாவது உள்ளும் புறப்பும் தூயதாக இருக்க வேண்டும். ஆலயத்தை பிரசாரத்திற்கோ வேறு வகை விழாவிற்கோ நாம் காரணமாக்கக் கூடாது.

ஆலயம் சிறந்திட வேண்டுமென்றுல் அர்சிக்கும் அந்தணர் தூய ஒழுக்க முடைவராக இருக்க வேண்டும் என பல முறையில் எம் சந்திர தீபத்தில் சுட்டிக் காண்பித்தோம்.

அர்ச்சகர்கள் பெண்கள் விடயத்தில் அதுவும் கோயில் உள்ளாகக் கடமை புரியும் போது மிகு அவதானமாகவும் தூய்மை உடனும் நடந்திட வேண்டும். குறிப்பிட்ட கோவிலில் சின்ன எஜமானது காதலி இப்பொழுது தான் வந்து போரு என அங்கு கடமை புரியும் அந்தணர் சொல்வதாஞல் கோயில்நிர்வாகம் என்னுகும் சிந்தியுங்கள்! அங்குள்ள அந்தணர்கள் வாசற்படியிலும் வீதிப்படிகளிலும் இருந்து வீண்கதையும் பேசிச் சிரிப்பதை விடுத்து அந்தக்காலங்களே தெய்வ நூல்களைக் கற்றுக் கொண்டிருக்கலாம் அல்லவா? அல்லது வேறு உட் கோயில் தூய்மை செய்வதில் ஈடுபடலாமே. அந்தணர்கள் தொண்டு புரிந்தால் குறைய மாட்டார்கள்.

கோயில் நிர்வாகம் பல குடும்பப் பிரச்சனையால் கோயில் நல் நெறிகளைப் பற்றி அக்கறை கொள்ளா திருப்பது வருந்தத்தக்கது. நாம் இதை கோயிலின் நலனிற்காக இங்கு சுட்டிக் காட்டுகின்றோமே அன்றி மனத் சுவாபத்தின் இச்சைகளைப் பற்றி நாம் குறிப்பிட வரவில்லை.

ஏதோ மிகப்பெரிய புண்ணியத்தலம். தற்போதுள்ள நிலைமாறி நல் நிலைப்பட்டால் நமக்கும் பல அன்பர்க்கும் மனமகிழ்ச்சியே! அல்லாதிருந்து நமது கருத்துக்களைத் தவருக எண்ணி மீண்டும் வஞ்சனையின் செயல்கள் மிகுந்தால் நாம் என் செய்யலாம். எது நேரினும் நாம் செய்ய வேண்டிய பணி தவறுகளைச் சுட்டிக் காட்டுவது. ஆதலினுலே நிர்வாகமும் அர்ச்சகரும் திருந்திய வழிகளைக் கையாண்டு கோயிலை தன் நெறிக்கு கொண்டுவர முயலுதலே நீதி.

கோயில் கும்பிடப்போன பெண்ணுடன் உறவு
குருக்களை அடிவாங்க வைத்தது

தெல்லிப்பழை துர்க்கை கோயிலில் சீக்கிரம் கலியாணம் வர எல்லாரும் வாருங்கள்! ஏழு செவ்வாய் வாருங்கள்! எலும்பிச்சம் பழப் பாதியில் விழக்குப் பிடியுங்கள் எல்லாம் வெற்றி என்று துர்க்கை கோயில் நிர்வாகம் விளம்பரம் செய்தது. இதனுலே அங்கு கன்னிப் பெண்கள் வருகை அதிகரித்தது. ஆளே ஆளைப் பார்த்துப் பார்த்து செவ்வாய் கிழமைகளில் ஏராளம் மக்கள் திரண்டு கொண்டனர். அங்கு போகும் மக்கள் தாராளமாகக் காசு கொடுக்கத் தொடங்கினர்.

இதனுலே நிர்வாகம் இவ்வளவு காசும் கொட்டுண்ணுகின்றதுஅம்பாளருள்எனத்தீர்மானித்தது மக்கள் மனக்குறை தீர்க்க அம்பாளுக்குக்குக் கொடுக்கும் காசு அது தங்களுக்காக அவர்மூலம் அம்பாள் கொடுக்கப் பண்ணும் காசு என எண்ணியது இதனுல் எங்களுக்கு ஒப்பாரும் மிக்காரும் ஒருவரிலர் என நிர்வாகம் இறுமாந்தது.

இதனுல் முன்பு ஒரு நாள் தேர்இழுப்பு விடயம் பற்றி எழுதியற்காக நிர்வாக உபகாரியதரிசியும் அவருடன் இணைந்த காடைத்தனம் மிகுந்த இளைஞரும் நம்மையும் தெல்லிப் பழைச் சந்தியில் வைத்து பதம்பார்க்க நினைந்தது என் பத்திரிகையில் குறிப்பிட்டது நேர்களுக்கு ஞாபகம் இருக்கலாம், குறிப்பிட்ட உபகாரியதரிசி முன்பு ஓர் கொலையும் செய்தவர். உபதலைவர் ஒருவர் தன் மனைவியை விடுத்து எதிர் வீட்டில் ஓர் சிங்கப்பூர் மனிதனின் மனைவிக்கு உதவியாய் இருந்தவர். இப்படி அந்த நிர்வாக சபை அங்கத்தவரின் சிறப்புக்கள் பல இந்து சாதனம் இக்கோயிலின் சிறப்புக்களை அச்சா என் தலையங்கம கொடுக்கும்.

இந்த வகை கன்னிகைகள் சென்று வழிபட்டு வரத் தொடங்க அங்குள்ள ஐயர் மாருக்கு இது நல்ல சந்தர்ப்பமாக மாறியது. மடப்பள்ளி ஐயர் ஒருவர் இப்படி ஒரு சந்தற்பத்தில் நேரில் காணப்பட்டு அங்குள்ள இளைஞர் சிலரின் ஊக்கத்தால் கோவிலால் அவரை நிர்வாகம் அகற்ற வேண்டி வந்துள்ளது. அதை மிக மனவேதனையுடனே நிர்வாகம் செய்தது ஏன் எனில் இளைஞர் அறிய முன்பு நிர்வாகத்திற்கு தெரியுமாம் ஆனல் அவரைப் போல் சுவாமிக்கு பலகாரம் சாப்பாடு வேறுபேர் செய்ய மாட்டார்களாம் என்பதற்காக தெரிந்தும் தெரியாததுபோல் மடப்பள்ளி ஐயரை வைத்திருதார்களாம். நிர்வாகம் இதை மறுக்கலாம், ஆனல் இவை உண்மை.

மடப்பள்ளி ஐயர் விடயம் போக கலியாண மாகாத குருக்கள் ஒருவர் அளவெட்டியைச் சேர்ந்த கன்னிகையுடன் கதைத்து காதல். அதனுலே காதலர்க்கு சந்திக்கும் வாய்ப்பு படமாளிகை தானே. ஆதலினல் குறிப்பிட்ட பெண்ணும் குருக்களும் படம் பார்க்கச் சென்றராம். படமாளிகையில் இருவரும் ஏதோ கதைத்துக் கொண்டனராம். படத்தால் வந்து பின்னர் இரவு வேளை பெண்ணின் இல்லத்திற்கு குருக்கள் சென்றராம். அப்போது இதன்மர்மம் அறிந்து வழியில் காத்திருந்து குருக்களுக்கு அடித்தார்களாம் சிலர். பின்னர் இதை அறிந்த துர்க்கை கோயில் திருப்பணிச் சபைத் தலைவி சிவமயச்செல்வி சிவத்தமிழ்ச் செல்வி தூர்க்காதுரந்தரி அங்கு அளவெட்டி சென்று அங்கு நிலைமையை மோசமாக்காது சீராக்கி உள்ளாவாம். ஏன் என்றல் தன் கோயில் குருக்களுக்கு அவமானம் நேர்வதோ என்பதாகும்.

ஐயர் புதுக்குடைவாங்கிக் கொடுத்தார்
கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி முருகன் கோவிலில் அன்று ஒரு நாள் ஓர் அபிஷேகம். அபிஷேகத்திற்கு கும்பம் தூக்கும் வேளை குடை பிடிப்பதற்காக கோயில் குடை வெளியில் கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்தது.

அன்று அவ்வழியால் அரசாங்க கொம்மிசனர் ஏதோ அரசியல் கருமத்திற்காக ஊர் வலமாக வந்தனர். தெரியாதே தமிழனுக்கு விழா எடுப்பதிலும் துள்ளிக் குதிப்பதிலும் இவ்வுலகில் வேறு ஒரு சாதி நிகரே இல்லை.

நிதான மில்லாமல் பேசுவதிலும் விழா ஊர்வலம் இவை வைப்பதிலும் தமிழன் சாமியைப் பிரட்டி என்ருலும் செய்ய அவன் கூசான், விழா என்ற பேச்சில் தமிழன் வெருளத் தொடங்கினுல் அவன் மனதைக் கட்டுப்படுத்த எவராலும் முடியாது. அவன் நிலை விசரன்கள் கள் உண்டால் எப்படியோ அப்படியே யாகும்.

கொம்மிசனர் வீதியால் ஊர்வலமாக வருவதற்கு குடை பிடிக்க எண்ணினர் சில கிளி நொச்சி உத்தியோகத்தரும் மற்றும் ஆதரவாளரும், கோயில் குடை கும்பம் தூக்க வெளியில் வைத்திருந்தது கொம்மிசனருக்கு குடை பிடிக்க விரும்பினேர்க்கு நல்ல வாய்ப்பாய் இருந்தது.

உடன் சென்று குடையை எடுத்தனர். கொம்மிசனருக்குப் பிடித்தனர். மகிழ்ந்தனர். சிறந்தனர்.

இது முடிந்தது. கோயில் நிர்வாகம் இதை உணர்ந்தது. ஐயரை விசாரித்தது. கோயில் குடையை எடுக்கும் போது அது செய்தல் தவறு என ஐயர் சொல்லி இருக்க வேண்டும். அப்படியாக ஐயர் சொல்லத் தவறியதின் காரணமாக ஐயர் புதுக் குடை வாங்கிக் கொடுக்க வேண்டும் எனத் தீர்மானித்தது.

கொம்மிசனக்குப் பிடித்த குடை இனி சுவாமிக்கு பிடித்தல் நலமன்று என்பது நிர்வாகத்தின் கருத்து. அதன்படி ஐயர் ஏற்று பொது மக்கள் நன்கொடைப் பண உதவியுடன் ஓர் புதுக்குடை வாங்கிக் கொடுத்தார்.

நிர்வாகத்தின் சிறந்த கருத்துடைய தீர்மானத்தை நன்கு போற்றுகிறோம், இந்த வகையாக நல்நிலையுடன் எல்லாக் கோயில் நிர்வாகமும் நடை பெற்றுல் நாடு எவ்வளவு தூரம் முன்னேறும்!இப்படியான கட்டுப்பாடுதான் மேன்மை கொள் சைவநீதி. திருக்கேதிச்சரமே நீ இந்த கோயில் நிர்வாகத்தைப் பார்த்து இனியாகிலும் திருந்து!

ஒரு இலச்சம் ரூபா வாங்கிறதென்றுலும் ஒரு தருக்கும் கோவிலில் வைத்து குடை பிடியாதே! பூமாலை போட்டு அவரை வீதி வலம் வரப்பண்ணுதே! கோயிலிற்கு பணம் வேணுமென்றுல் நிதானமாகப் போய்க் கேள்! குடை பிடித்து மாலை போட்டு ஆடை சாத்தி காசு பறியாதே! அது ஒரு அவமானம்.

சந்திரதீபம் பிரகாசிக்கின்றது.

மனிதன் மாற வேண்டும் சமய ஒழுங்கு நின்று தவறுது வாழ வேண்டும், சொல் ஒன்று செயல் ஒன்றுக இருக்கப்படாது. வேதியர் வேதியராக வாழவேண்டும். காலங்களுக்கு ஏற்ற சமய வளர்ச்சி அமைக்கப்பட்டல் வேண்டும். தன் புகழை காட்ட சமயத்தை ஆயுதமாக எடுப்பவன் மனித சமூதாயத்தில் இருந்து மறுக்கப்படல் வேண்டும்.

மேற் கூறியபணிகளுக்கு சந்திரதீபம் பிரகாசிக்கவேண்டும்.

குகராசன்
ஐக்கிய வியாபாரச் சங்கம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தொழிற்சங்க நிலை அந்தணர்க்கும் என்றால் வேத நெறி பாழடையும்

அந்தணர்கள் கூலியாட்கள் அல்ல. அல்லது போல் உலகிற்கு பயனானவர்கள்.

சில அந்தணக் குடும்பங்களில் முளையாதன முளைத்து நடவாதன நடத்தி தன் குலத்திற்கும் வேத நெறிக்கும் தருமத்திற்கும் பெரும் கேடு விளைவிக்கும் இவ் வேளையில் மீண்டும் வேத நெறியைப் பாழ்படுத்தவும அந்தணர் குலத்தை நாசஞ் செய்யவும் சில பத்திரிகைகள் விளக்கமிலாத கட்டுரை மூலம் கருத்துகள் பரப்புகின்றது.

திருநாவுக்கரசரது உளவாரப் படையின் கூர்மையை சவர அலகிற்கு ஒப்பிடற்கு முனையும் பத்திராதிபாகள் நம் நாட்டில் உண்டு.

பத்திரிகைகளில் போடும் விளம்பரம் போல் சமயத்தைக் கருதலாகாது. சமயம் வாழ்வின் மேலான கருமம், அது புனித புண்ணிய அடிப்படையில் உளது. அதை விளங்காது விழாப் போல் கருதி சமயக் கட்டுரைகள் சீலத்தின் விளக்கம் இலாது எழுதப் பட்டால் பெரும் விபரீத விளைவை உண்டாக்கி விடும்,

பசுக்களிடத்துப் பெறும் பொருள் எல்லாம் பயனாவது போன்று அந்தணர்கள் வாழ்வே உலகின் பயனாவது, இதுவே சைவம். சைவம் பசுவிடத்துப் பெறும் பால் தயிர் நெய் கோசலம் (சலம்) கோமயம் (சாணம்) யாவும் பயனாவது மட்டுமன்றி அதனை மங்கலமான தரிசனத்திற்கும் ஓர் பொருளாகக் கொள்கின்றனர்! கும்பாபிஷேகம் கலியாணம் இவ் வேளைகளில் பசு தரிசனம் முக்கிய அம்சமாகும்.

இதே போன்றே அந்தணர்களது யாகம் வேதம் ஓதல் பூசை செபம் முதல் பல அமசமான செயல்களும் உலகின் சேமத்திற்குரியன என சைவ நூல்கள் தெரிவிப்பன. இதை உணரமுடியாது அவர்களை ஓர் தொழிலாளியாகக் கருதி தொழிற் சங்க ரீதியில் அவர்களையும் பாவிப்பது என்றால் அது உண்மையில் கவலை தரும் செய்தியாகும். தயவு செய்து சைவ நெறியில் கை வைக்கும் போது வேத நெறியின் புனிதத்தை நன்கு தெளிந்து கொண்டு பின்னர் அதற்குரியவற்றை செய்யுமாறு சைவ நெறியைப் பரப்ப முயலும் எல்லாப் புதினப் பத்திரிகைகளையும் அரசாங்கத்தையும் வேண்டுகின்றேன்,

மேலே நாம் தெரிவித்த கருத்தை வெளிப்படுத்த கீழே தரப்பட்ட ஓர் கடித மூலம் அன்பர் ஒருவரது கருத்துக்களைக் காண்க.

கனம் ஆசிரியர்
சந்திர தீபம்
கொக்குவில்
ஐயா

வீரகேசரி 23 8 79 நாளிதழில் மேற்படி தலைப்பில் பிரசுரமான நல்லை லோஜனி அவர்களின் கட்டுரையை வாசித்தபின் இப்பதிலை தங்களுக்கு எழுதுகின்றோம். தயவு கூர்ந்து உரியமுறையில் பிரசுரித்து நலமுண்டாகச் செய்வீர்கள் எனத் திடமாக நம்புகின்றோம்,

குருமாரின் சிறப்பைக் கூறி ஆரம்பித்த கட்டுரையாளர் பொதுவில் தாமாகவே குருமாரை இரண்டாந்தர நிலைமைக்கு இறக்கிவிட்டுள்ளார். எங்ஙனமெனில் தம்மைத் தாம் உணராத நிலையில் தாமே பணியாட்களாக மாறி விட்டமையையும் தொழிற்சங்க விடயத்தையும் சேமலாப நிதி விடயத்தையும் இன்னோரன்ன சலுகைகளையும் அர்ச்சனைக் காசையும் தேங்காய்ப் பாதிகளையும் இழுத்து பணியாட்களாக முத்திரை பொறிக்க வழிகாட்டி அவலத்தை எழுப்புவது வேதனைக்குரியதாகும். இதற்கு அந்தணர் குலமே வேதனையும் வெட்கமும் அடைந்து தலை குனிய வேண்டியிருக்கின்றது.

இந்நிலை யாரால் ஏற்படுத்தப் பட்டது? தர்மகர்த்தாக்களினாலா? பொதுமக்களினாலா? தமது அந்தண நிலையைப் பேணிவளர்க்காத அந்தணர்களினாலா? தயவு செய்து யாவரும் அமைதியாகச் சிந்தியுங்கள். அந்தணர் அழகிய தண்ணளியை உடையவர். குரு. பாசத்தை நீக்குபவர். இதனால் கண்கண்ட கடவுளாக மதிக்கப்பெறுபவர். ஆகமம் ஐயந்திரிபற ஆய்ந்து அந்நெறியே வழுவாது அனுட்டித்து அதனால் தம்வசமே சிவ சாந்நித்தியமடைந்துள்ள அந்தணர் பெருமையை யாம் கூறத்தகுமோ? ஆன்மார்த்த பூஜை செய்து பரார்த்த பூஜை செய்வதனால் ஆலயம் பெருமையடைகின்றது.

இன்றைய நிலைமையென்ன? ஆலயங்களில் ஒழுங்கான நித்திய நைமித்தியங்கள் ஆகம முறைப்படி ஒருமித்த பான்மையில் நடைபெறுகின்றனவா? ஒவ்வொரு குருமார் ஒவ்வொரு விதமாய கிரியை முறைகள். ஆடம்பரங்களாக கிரியைகளை மாற்றியோரும் உள்ளனர். தமது அனுட்டானம (சிவ பூஜை முதலியன) கைக்கொள்ளாது தினமும் ஆலய பூஜைகளை தமது வசதிப்படி செய்வாருமுளர். அருளிடவேண்டியவர்கள் பொருளீட்டமே கண்ணாக இன்று கடமை செய்கின்றனர். டாம்பீக வாழ்வு வாழும் அந்தணர் இன்றில்லையா? தமது கடமைக்கு கூலி காணாதென்று வாயால் கேட்டு வாதாடியவர்களுமுளர். ஆசாரம் பேணாத அந்தணருமுளர். [தயவு செய்து உத்தம அந்தணர்கள் மன்னிப்பார்களாக.)

அந்தணர் கடமையென்ன? (ஆகமம்) கற்றாங்கெரியோம்பி கலியை வாராமே செற்றவர்கள் அந்தணர்கள். இன்று அங்ஙனம் நடைபெறுகின்றதா? அதனால் தான் அகலவேண்டிய கலியானது எரியோம்பாத அந்தணர்களையும் பற்றிக் கொண்டது போலும்.

பலவருடங்களுக்கு முன்னர் ஈழத்தில் எத்தனை ஆலயங்களை தமது பொறுப்பாக நிர்வகித்து நடாத்திவந்தவர்கள் அந்தணர்கள்; இன்னும்சில ஆலயங்கள் அவர்கள் வசமே உள்ளன, அவர்களால் நிர்வகிக்கப்பெற்ற ஆலயங்கள் நித்திய நைமித்திய பூஜைகளில் தடங்கல்கள் ஏற்பட்டமையாலும் கட்டிடங்கள் பாதுகாக்கப்படாமையினாலும் சீரழிந்த நிலையிலிருந்த ஆலயங்களை மக்களே எத்தனையோ சிரமப்பட்டு (நீதிமன்றம் ஏறியும் கூட) பொறுப்பேற்று தர்மகர்த்தா சபைகளை ஏற்படுத்தி ஆலயங்களை நல்லபடி நடாத்த முனைந்துள்ளனர்.

ஆடம்பரமாகத் திருவிழாக்கள் செய்கின்றனர், உண்மை. இவ்வாறான ஆடம்பர விழாக்களின் கிரியைகளை ஏற்று அகால வேளைகளில் செய்து (யாக பூஜை உட்பட அனைத்தும்) பாவத்து உடந்தையாக எத்தனை குருமார் உள்ளனர். இப்பாவம் அறிவற்ற திருவிழாக்காரரைச் சாருமா அல்லது அறிவிலே சிறந்து ஆன்மீக ஈடேற்றம் பெறச் சிறந்த வழிகாட்டிகளாக விளங்கும் குருமாரைச் சாருமா? ஏன் பாதநெறியில் செல்லவேண்டும்? உயிர் போகவரினும் தம் நெறி பிறழா அந்தணராயின் நிச்சயம் ஆடம்பரத் திருவிழாக்கள் எப்போதோ நின்றிருக்கும். எதனால் அந்தணர்தம் சக்தியால் அறந்தழைக்க விழைந்த பான்மையினால்.

இன்றைய குருமாரில் பலர் ஆகமத்தை முற்றுணர்ந்தோரின் கீழ் நின்று அவர்வழி கிரியைகளைப் பயின்று அவரது ஆசிபெற்று பின்பு கிரியைகளைத் தாம் செய்ய ஆரம்பித்தவர்கள் உள்ளனரா? விரல் விட்டு எண்ணிப்பார்க்கவேண்டும். இந்நிலைகளை உற்றுணராது அந்தணர் அவலத்துக்கு மக்கள் தான் காரணம் என்பதை யாம் ஒப்புக் கொள்வதற்கில்லை. தக்கன் வேள்வியில் பங்கு கொண்ட தேவர்க்கு என்ன கதி ஏற்பட்டதோ அக்கதி தான் தற்போது ஏற்பட்டது. இதை நன்றாக உணரவும். விளக்கம் தேவையில்லை என்றே கருதுகின்றேன்.

அந்தணர்கள் பொருளின்றிக் கஷ்டப் பட்டதாக முன்னாளில் அறிந்திலேம். மக்கள் வறுமைப் பட்ட நிலையிலும் அந்தணர்கள் மக்களைக் காத்த வரலாறுகளேயுண்டு. அப்படியிருக்க இன்று பொருளில்லை—அவலம் அவலம் என்று ஒலமிடக் காரணம் என்ன? அருளை உண்டாக்குவது பொருளா? பொருளை உண்டாக்குவது அருளினால் உண்டாகும் தர்மமா? அந்தணர்கள் அந்தணர்களாக தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்படியிருக்கையில் செல்வந்தரான தர்மகத்தாக்கள் தம்மை ஆட்டிப்படைக்கின்றனர் என்று கூற வெட்கமா இல்லை? அப்படிக் கூறுவதாயின் அவர்களிடம் அருளில்லையென்றே கருத வேண்டும்.

தற்கால கும்பாபிஷேக வைபங்களில் கிரியைகளில் எவ்வளவு ஆடம்பர மாற்றங்கள். முப்பத்திரண்டு குண்டங்கள் போட்டு கும்பாபிஷேகம். பொருட்களை வாரியிறைக்கின்றான் தர்மகர்த்தா? முப்பத்திரண்டு குண்டங்களிலும் ஓமம் செய்யும் குருமாரோ ஒருமித்த பான்மையில் செய்கின்றனரா? எத்தனை பேர் காலை 'காபி' அருந்தி விட்டு செய்பவர்கள் உளர் (எல்லோரையும் கூறலில்லை) (உத்தமர் மன்னிப்பாராக). இப்படிச் செய்வதால் கும்பாபிஷேக பலன் கிடைக்குமா? பொருளைக் கொடுப்பவன் இவற்றை அறிவானா? புறக்காட்சிகள் அலங்காரமாக உள்ளன அவற்றைத்தான் இவன் காணமுடியும். சந்தோஷ மடைகின்றான். அவ்வளவுதான். ஆனால் நியமம் தவறிய கிரியைகளும் அந்த யாகத்தில் கலப்பதனால் குறித்த (உள்ளுனர்வால் உணரும்) பலன் உண்டாகுமா?

எனவே சைவப் பெருமக்களே. அந்தணர் அவலம் போக்க வேண்டுமாயின் நிச்சயம் அந்தணர்கள் அந்தணராக்கப் படவேண்டும். வேத ஒலி ஓங்கவேண்டும். ஆகமங்கள் முறையாக நடைபெற வழிகள் பேணவேண்டும். தலமைப்பீடமாக ஆகமம் அமைய வேண்டும். அதைப்பயின்ற உத்தம குருதலைமையில் ஆகமம் எங்கும் பரந்து நடைபெற வகை செய்தல் வேண்டும்.

குருமாருக்கு மாதச்சம்பளம் என்ற பேச்சு இல்லாது போகவேண்டும். ஒவ்வொரு குடிமகனும் காணிக்கையாக தாராளமாக செலுத்தவேண்டும்; இதை வரியென்று குடிமகன் கொண்டு செழுத்தலாம். குருமார் தாராளமாக தர்ம வாழ்வுக்கேற்ற பணத்தை எடுத்துக் கொண்டு மீதியை தர்மத்துக்கே செலுத்திவர வேண்டும். சுருக்கமாகக் கூறின் பண்டை நாள் நிலைமை மீளவேண்டும்.

இந்நிலைமையை உருவாக்குவதேயன்றி பணியாட்கள் என்று கருதியாம் செயற்பட முனைந்தால் அந்தணர் குலம் என்று ஒன்று வேண்டியதில்லை. மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

'தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'

இங்ஙனம்.
பணிவன்புள்ள.
செ இரத்தினசிங்கம்.
நாணாட்டான்

தீபம் வரப்பெற்றது நமது பாக்கியம்

உ

திரு. நல்லையா: முள்ளியவளை.
அவர்களுக்கு 16–12–79
சந்திர தீப ஆசிரியர். கொக்குவில்.
ஐயா!

கோப்பாய் சமாதான நீதிபதியவர்கள். மூலமாக எனது சந்தாவைப் பெற்று கொண்டு மங்களகரமாகிய தீப விசேட மலரை முதன் மலராக அனுப்பியிருந்தீர்கள். அது எனக்கு அளவிலா ஆனந்தமளித்தது அதை நான் பாக்கியப் பேறாகவே கருதுகின்றேன். அதுவும் எனக்கு வெள்ளிக்கிழமை காலை கிடைத்தமை வெகு விசேடமாகும்.

அதில் நீங்கள் முற்பக்கத்தில் காட்டியிருந்த கந்த புராணத்தின் ''தேவாசுர'' தத்துவ விளக்கத்தைப் பன்முறை படித்துச் சுவைக்க வேண்டியதாக இருந்தது பெருஞ் சிறப்பாகும்.

நவாலி முதலியார். மகேசனின் வேண்டுகோளை... ''ஒருசிலரைக் குறித்துக் கண்டனங் கூறுவதைத் தவிர்ப்பது நலம்'' என்பதை எனது முன்னைய வேண்டுகோளுக் கிணங்கிய தெனக் கண்டு அதை நானும் உள்ளன் போடு வரவேற்கின்றேன்:

வாழ்க. உங்கள் தொண்டு.
வளர்க. நமது சைவம்
சுடர்க. உங்கள் தீபம்.
இங்ஙனம் அன்பன்
அரியான் பொய்கை
க. செல்லத்துரை.

திருக்கார்த்திகை உற்சவம் சிறப்புற நடந்தது.

சென்ற வருடம் திருக்கார்த்திகை உற்சவத்தின் போது ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோவில் குருக்களும் நிர்வாகமும் மன்னிக்க முடியாத குற்றத்தை பல ஆண்டுகளாகச் செய்து வந்த ஒரு உபயகாரருக்கு இழைத்த படியால் அந்த உபயகாரர் வேறு வகையின்றி பெரும் கவலையுடன் தாம் செய்து கொண்டு வரும் திருக் கார்த்திகை விசேட அர்ச்சனை வழிபாடுகளைக் கைவிட்டனர்.

இது பற்றி சென்ற வருடம் எமது பத்திரிகையில் குறிப்பிட்டு நாமும் கவலை தெரிவித்தோம். கோயில் குருக்கள் தொடர்ந்தும் பல பிரச்சனைகளை கிளப்பியதால் நிர்வாகம் அதனை உணர்ந்து அக்குருக்களை நீக்கி வேறு குருக்களை நியமித்தது.

புதிதாக வந்த குருக்கள் ஆதி சைவ அந்தண மரபினராதலின் நன்கு உற்சவத்தினை உணர்ந்து உபயகாரரின் மனம் சிறக்க பலஅந்தணப் பெரியோருடன் கண்ணியமாகக் கலந்து அந்த உபயத்தை செய்து முடித்தார். கிரியைகள் யாவும் ஆகமவிதிப்படி மிகு வைதிகமாக நடைபெற்றன. ஒலிபெருக்கி முதலிய வீண் செயல்கள் நிகழவில்லை.

விசேட மேளங்கள் வருகை தந்தன. ஆனால் ஒன்றேனும் சினிமாப் பாட்டோ அல்லது டப்பா சங்கீதமோ ஊதவில்லை. எல்லா மேளங்களும் அருட் பாடல்களும் கண்ணிகளும் வாசித்தன. அபிஷேகம் நியாசம் சண்முகர்ச்சனை ஆநந்தமுடன் நடைபெற்றன இனி ஏனைய கோவில்களும் பின்பற்றுமோ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மையானதும் உயிருக்கு உயர்வைத் தருவதும் எதுவோ அது தருமம்

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்

ஐயா

கல்தோன்றி மண்தோன்றாக் காலந்தொட்டே மனிதன் இப்பூமியில் வாழ்ந்து வருகின்றான். பிறப்பு பிணி மூப்பு சாக்காடு அவனை என்றுந் தொடர்ந்து கொண்டே வருகின்றன. தன்னால் பிறரால் பஞ்சபூதங்களால் அவனால் அறிய முடியாத பிற ஏதுக்களால் துன்ப மடைந்து கொண்டே வருகின்றான்.

பல காலம் சென்றும் அறிவு வளர்ச்சியடைந்தும்சிருஷ்டியும் அதன் உன்னத மனிதப் படைப்பும் அவனுக்குப் பரம இரகசியங்கள். கருவுற்ற நாள்முதல் தோம் தேய்ந்தொழியும் வரை சிருஷ்டியின் தாக்கங்களும் ஆட்டங்களும் அவனை விட்டுத் தீர்ந்தபாடில்லை. ஆகவே தன்னை ஆட்டிப் படைக்கும் சிருஷ்டியையும் மனிதப் படைப்பின் பரம இரகசியங்களையும் அறிந்து தெளிய வேண்டும் எனும் தீராத தாகம் உள்ளத்தில் உதித்தது.

மலைகள் ஆற்றோரங்கள் வனந்தரங்கள் கொடிய மிருகங்கள் வாழும் காடுகள் எங்கும் சஞ்சாரஞ் செய்தான். சிருஷ்டியின் பேரெழிற் காட்சிகள் அவனை வியப்பில் ஆழ்த்தின. இவை ஏன்? எவ்வாறு நிகழ்கின்றன என்பன பற்றி ஆழ்ந்து சிந்தித்தான், உண்மையை உணரத் துடியாய்த் துடித்தான்.

உள்ளத்தை ஒருமுகப்படுத்தி அரிய தவம் பூண்டான். ஊண் உடை மறந்தான். தன்னை மறந்தான் இரவு பகல் மறந்தான். காலத்தை மறந்தான் தியானத்தில் ஆழ்ந்தான் உண்மையும் அவனுக்கு வெளிப்பட்டது. காணுத காட்சிகள் கண்டான். சிருஷ்டியை முற்றுமாய் உணர்ந்தான். தனக்குப் பரம இரகசியங்களாயிருந்தனவெல்லாம் வெளிப்படையாயின. ஆனந்த பரவசமானான். அனைத்துமாய் அனைத்துக்கும் மூலகாரணமாயுற்ற மெய்ப் பொருளை உணர்ந்து தெளிந்தான். ஆனந்தமேலீட்டில் தான் பெற்ற இன்பம் உலகம் பெற்றுய்யத் தன்னை மறந்து மெய்ப் பொருள் வசப்பட்டுக் கோஷித்தான். அக் கோஷத்தில் எழுந்த கீதங்களே உண்மைப் பொருள் தரிசனத்தின் வெளிப்பாடாம். இவையே நம் நல்லறிவு படைத்த முன்னோன் தந்த அறக்கடலாகிய அருட்செல்வம். பிறவிப் பெருங்கடல் நீந்திக் கரையேறத் துணைபுரிவது. இவ் வருமருந்தை உணர்ந்து தெளிந்து அவ்வழியிற் செல்வோம் என்கிறது சந்திர தீபம்.

மனிதன் மெய்ஞ்ஞானதரிசனம் பெற்றுலன்றித் தன்னையும் தன் தலைவனையும் தன் தலைவனின் கருணையிலெழுந்த சிருஷ்டியையும் ஒரு பொழுதும் உணரவும் மாட்டான். தன் பிறப்பு இறப்புத் துன்பங்களிலிருந்து நீக்கி விடுதலையடையவும் மாட்டான்.

உலகுக்கு அறவழி காட்டிய நம் பரதகண்டத்தில் காலத்துக்குக் காலம் மெய்ஞ்ஞானதரிசனம் பெற்ற ஞானிகள் தோன்றி அறவழி காட்டிச் சென்றனர், உலகெங்கும் அறவாழ்வு பரந்தது, வாழ்வு மலர்ச்சி பெற்றது. சிவவழிபாடு எங்கும் நிலவியது. அது ஒரு பொற்காலம். அறம் உலகில் எங்கும் நீடித்து நிற்பதில்லை. மறத்தின் வலிமை அதை விரைவில் மறைத்துவிடும். அதன் விளைவுகளை உலகம் அனுபவித்தே தீரும். எங்கும் பூசலும் பிணக்கும் கொடுமையும் அமைதியின்மையும் பயங்கர நிலையும் நிலவும், சிருஷ்டியே சிற்றமுற்றெழுந்து பேரழிவையேற்படுத்தும், இந்நிலையிலாவது மனிதன் பற்றவேண்டியது எது விடவேண்டியது எது என்று உணர்வானே? அப்பர் சுவாமிகள் பாடல் தென்பைத் தருகிறது. அதையுணர்ந்து தெளிவடைவோமாக.

மண்பாதலம் புக்கு மால்கடல்
மூடிமற்றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர்
வீழினும் அஞ்சல் நெஞ்சே
திண்பால்நமக்கொன்று கண்டோம்
திருப்பாதிரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட்
சுடரான் கழலிணையே.

அறம் அழிவதில்லை. பொருந்தா அரக்கன் அதை மறைக்கிறான். கழலிணைப்பற்று பொருந்தா அரக்கன் உடலை நெரித்தே தீரும். ஆதலால் அறநெறிப்படுங்கள் என்று தீபம் குரல் போடுகிறது. தீபம் சுடும். அது தனித்தீபம் மாத்திரமல்ல தண்மையும் கொடுக்கும் சந்திரதீபம், ஏமாற்றுப் பேர்வழிகள் சுயநலவாதிகள் இடம்பாச்சாரிகள் அறிந்தோ அறியாமலோ அறவழியை மறைத்துக் குறுக்கே நிற்கிறார்கள். ஆதலால் உண்மைத் தரிசனவழி மறைபடுகிறது என்று இரங்கற்குரல் எழுப்புகிறது. ஐயா சந்திரதீப ஆசிரியர் அவர்களே அறவழியோ மெத்தக்கடினமான வழி ஐயா; உலகை அறவழியிற் செலுத்தக் காலத்துக்குக் காலம் அறச் செல்வர்கள் தோன்றினர்கள்; அவர்கள் பட்ட பாடே சொல்லுந் தரமல்ல. சோதனைக்கு மேல் சோதனை. தேவாசுர யுத்தம் என்றும் நடந்தேதீரும். தோல்வி கண்ட விடத்தும் அசுரன் அகம்பாவம் அழியாது. கடைசிவரை அது அகங்கரித்தே நின்றடங்கும்.

அறவழிச் செல்வோரையும் அறம் உரைப்போரையும் உலகம் பதம் பார்த்தே றிற்கும். உண்மை உணராத உலகுக்குச் செக்கும் சரி சிவலிங்கமும் சரி. திருஞானசம்பந்தப்பிள்ளை தங்கிய திருமடத்திற்கும் தீவைத்தார்கள். மெய்ஞ்ஞான சம்பந்தர் அதை உணர்ந்தார். உடனே சந்தர்ப்பத்திற்குத்தக்க செய்யனே (எரிபோன்ற சிவந்த மேனியனே) என்று திருவாக்கு எழுகிறது. அவ்வெரி உலகையே எரித்து விடும். ஆனால் அங்கு திருவருட் செயலும் நிகழ்கிறது. கொடியவர்கள் தாம் செய்யும் கொடுமைகளை உணர்ந்து அவற்றை நீக்கி அறவழியிற் செல்லல் வேண்டும் என்பது தெளிவாகிறது. பையவே சென்று என்பதனால் தீயே நீ உன் சுயஉருவில் சென்றுல் பாண்டியன் பொடி சாம்பராய் விடுவான். அவன் உரை இடமில்லை ஆகவே நீ வெப்பு நோயின் உருவுடன் விரைவாகச் செல்லாது பையவே சென்று பற்று வாயாக என்று பணிவுடன் கூறுகின்றார். அறம் வளர்த்த பிள்ளையின் பாடலைப் பாடி இன்புறுவோம்.

செய்யனே திரு ஆலவாய்
மேவிய
ஐயனே யஞ்ச லென்றருள்
செய்யெனைச்
பொய்யராம் அமணர் கொளு
வுஞ்சுடர்
பையவே சென்று பாண்டியற்
காகவே

அவ்வளவில் விட்டார்களா கொடியவர்கள். இல்லை. கடைசிவரையும் அகங்கரித்தே நின்றடங்கினார்கள்.

காலத்துக்குக்காலம் உலகில் நல்லாசிரியர்கள் தோன்றி நல்லுபதேசங்கள் கூறிச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் கூறியதை உணர்ந்து அதன் வழி ஒழுகுவோரே ஆசாரசீலர்கள் அறங்காவலர்கள் அவர்களே உலகின் துயர் நீங்க வண்டுபவர்கள்.

உண்மையானதும் உயிருக்கு உயர்வைத் தருவதும் எதுவோ அது தருமம். தருமவழிச் செல்வோர் ஆசாரசீலராய் விரதம் பூண்டு சிவபுண்ணியங்கள் ஆற்றல் வேண்டும். வழியோ மிகவும் கடினமானது ஐயா,

கொல்லாமை பொய் கூறாமை கள்ளுண்ணாமை களவு செய்யாமை பிறன் மனைவிழையாமை ஆகிய பஞ்சமா பாதகங்களை நீக்கி விரதம் பூண்டு நல்லொழுக்க சீலராய்ச் சிவ புண்ணியங்கள் புரிந்து அருள்வழிச் சென்று உடலும் உள்ளமும் தூய்மையடைந்து தோத்திரங்கள் சாஸ்திரங்கள் புராணங்கள் முதலிய உறுதிப்பொருள் உணர்த்தும் நூல்களைப் பத்தி சிரத்தையுடன் முறைப்படி பயின்று தெளிந்து அவை கூறும் நெறிக்கண் ஒழுகி அருள் வசப்பட்டுத் தெய்வ வழிபாடு தானம் தவம் தியானம் செபம் முதலிய விரதானுஸ்டானம் கைவரப் பெற்று பொறிபுலன்களை அடக்கி உள்ளத்தை ஒருமுகப்படுத்திக் திருவருளைப் பெறும் சாதனங்களைப் பயின்று மெய்யுணர்வு பெற்று மலபரிபாகமெய்தி மெய்ஞ்ஞான தரிசனம் பெற்று ஞானத்தைப் பெற்று பாசத்தை நீக்கி உண்மைப் பொருள் உணர்த்தப் பெற்று அஞ்செழுத்துபதேசம் பெற்று தன் செயலற்றுத் திருவருள் வசம் நின்று சுத்தியடைந்து அத்துவிதக் கலப்பெய்தி ஜீவன் முத்தர் நிலையடைந்து இம்மை மறுமை அம்மைப் பயனைத்தரும் வினைகளொன்றும் தாக்காமல் பேரறிவைப் பெற்றுப் பரமுத்தியும் சரீரம் இருக்கையில் பெற்று சிவம் உயிர்களில் இரங்குவது போல சிவன் முத்தர் நிலை பெற்று இரங்கும் நிலையடையும் வரையும் தருமம் உயிரை உயர்வடையச் செய்யும். அன்றியும் சிவபெருமான் சிவன் முத்தரை அதிட்டித்து நின்று ஞான சாஸ்திரங்களையும் தோத்திரங்களையும் தோற்றுவித்தருளுவர் இவர்களே பெத்தான் மாக்களில் அருளுடையவர். ஆகவே சைவம் கூறும் அறநெறி முற்றும் அவன் வழிநடத்தலேயாம். என் செயலாவது ஒன்றுமில்லை என்றவாறு. ஒரு கூற்றைக் கூறி அமைகிறேன். சித்திப்பீர்களாக,

இருளிற் போக்கற்றுக் கிடந்த
என்னைப் பரிந்தெடுத்துப் போக்கு
வரவிற் புகுத்தி என் தடையறுத்து
சிவ ஒளிபுரிக்கு வழித்துணை புரிந்து
அந்தமில் இன்பந்தருபவன் அம்மை
அப்பன்,

எல்லாம் அவன் செயலே என்று
உணர்வோமாக.

மாவிட்டபுரம் அன்புள்ள
வே தியாகராசா

சந்திரதீபம் தருமத்தைக் காப்பது

அந்தணர் அறவழி ஒழுகலே சைவத்தில்முக்கியம்

நீண்ட காலமாய் தங்கள் பத்திரிகை படித்து வரும் பாக்கியம் கிடைத்தது. உண்மையில் நீங்கள் எழுதுவது அத்தனையும் உண்மையே, எமது மதம் திருந்த வேண்டுமானால் அந்தணர் அறிவுடையோராய் இருக்க வேண்டும். அவர் செவ்வழி நடக்க வேண்டும். ஒழுக்கத்தோடு காணப்பட வேண்டும். தங்களது போன கிழமை சந்திர தீபத்தில் சாவகச்சேரி சிவன் கோயிலில் ஆலய அந்தணர் குறை பாடுகளையும் சீர் கேட்டையும் கண்டேன். இதுமாதிரியே சாவகச்சேரி புராதன சிவாலயத்திலும் பெரிய சீர்கேடு உண்டு. குடும்பம் வசிக்கிறது. திட்டு துடக்கு எல்லாம் ஒன்று; கிணற்றில் குளிக்க விடாமல் ஒருவர் தடுத்தார். தீண்டத்தகாதோர் குறைகள் பல. அதிகார வர்க்கத்தினரில் மனேச்சர் தன்மை. எல்லாம் அநியாயம். அத்தோடு சாவகச்சேரி ஸ்ரேசன் முருக மூர்த்தி ஆலயத்தில் பெரிய கிலுசுகேடு. குடிச்சு விட்டு உறங்கிறார்கள். அந்தணரும் கோயில் ஐயர் ஊத்தையாய் இருப்பார், நன்றாக குடிப்பார் குடித்து விட்டு சத்தம் போட்டு பூசை செய்வார். பெண்களோடு மடப்பள்ளியில் சல்லாபம். இது போன்றே புராதன பரிபாலன ஆலயத்தில் மடப் பள்ளியில் ரேடியோ பாட்டும் சல்லாபமும் நடக்கிறது. மனேச்சரும் இவரை விட்டால் வேறு தெரிய வில்லை என்று வைத்திருக்கிறார்கள். இலட்சார்ச்சனை நடை பெற்ற கோயிலில் நாம் பெரிய குறை கண்டேன். ஐயர் மார்கள் தூடண வார்த்தையும் பைலாவும் மடப்பள்ளியில் போட்டார்கள், ஐயர் மார்கள் நேராய் கால் கழுவாமல் கோயிலுக்குள் நுழைந்தனர். அத்தோடு நேரமாவதால் வந்து விட்டு இறங்கி வந்து குளியாது வில்வம் சாத்தினால் இவை எல்லாம் கண்ணால்கண்ட எனக்கு பெரிய கவலையை உண்டு பண்ணியது. மனேச்சரோ ஆசாரமற்றவர். ஒவ்வொருநாளும்இறைச்சி தின்பவர். இன்னொரு விஷயத்தை அவதானித்தேன். ஒரு வயது போனவரை நீ வா என்று மரியாதைக் குறைவாய் கதைக்கக் கண்டேன். மேலும் சாமிக்கு வைத்த கழிக்கப்பட்ட நிர்மாலியமே இங்கு லட்சார்ச்சனையின் போது திரும்பத் திரும்ப பாவிப்பது கண்டேன். பெரிய கவலை. தங்கள் மூலம்தான் இனித்திருத்த முடியும். சிவன்கோவிலில் 1 ரூபா குறைய அர்ச்சனை கிடையாது. சினிமா கொட்டகை போல காணப்படுகின்றது மேலும் இவை திருத்த தங்களால் முடியும் தங்கள் தொண்டு நீடுழி வாழ வேண்டும்.

இப்படிக்கு
சிவதொண்டன்
மு பரமசிவம்

பிராமணர்களையும் உண்டாக்கலாமா?

ஓர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் சமயத்துறையில் பயிலும் ஆசிரியர்கள் சிலர் கந்த சட்டி காலத்தில் சில சிறப்பு நிகழ்ச்சி வைத்தனர். அந்த சிறப்பு நிகழ்ச்சிகள் முடிவில் ஓர் விழா நடைபெற்றது. அதில் ஓர் கருத்தரங்கு நிலவியது. அவ்விழாவில் பங்கு கொண்டு கலந்து சிறப்புரை நிகழ்த்திய மில்க்வைற் செய்தி ஆசிரியர் ஒருவர் அங்கு பேசும் போது ''பிராமணர்கள்'' இன்று பற்றாக் குறைவாக உளர். ஆனதினாலே நாம் வேளாண் குலத்தவரை இரண்டாம் தீட்சை கேட்கச் செய்து அவர்களைப் பூணூல் அணிவித்து பூசை செய்ய விடலாம் எனக் கூறினாராம்.

அச் செய்தியை சில பிற அந்தணரும் ஏற்கின்றனராம் என்று இவ்வாறு மில்க்வைற் செய்திப் பத்திரிகையின் ஆசிரியர் அந்தவிழாவில் தெரிவித்துக் கொண்டார்.

சிவதர்ம வள்ளலாய் பணி மரம் வளப்பவராய் இருக்கும் ஒருவரால் நடத்தப்பட்ட சவுக்காரச் செய்திப் பத்திரிகையின் ஆசிரியர் இவ்வண்ணம் பேசுதல் நன்று.

ஆறுமுக நாவலரை ஐந்தாம் குரவர் நாவலர் பெருமான் எனப் போற்றும் பேதையர் கூட்டம் இதை நிச்சயம் வரவேற்கும். சவுக்கார சிவதர்ம வள்ளல் சிறு பிள்ளைகட்கு ஓலைச் சுவடில் அ. ஆ அச்சிடுவித்து கொடுப்பது போல் புதிதாக உண்டாக்கப்படும் பிராமணர்க்கு பூநூல் இலவசமாகக் கொடுக்கலாம். இதுவன்றி பூநூல்கழுவ வேட்டி தோய்க்க இலவச சவுக்காரம் வழங்கலாம். இதெல்லாம் மிக நன்று. ஆசிரியர் கருத்தைப் பாராட்டுகின்றோம். மணி கட்டிய பண்டிதரும் வாழ்த்தி வணங்கியில் சிறப்புரைப்பார். நல்லது ஆனால் சந்திர தீபத்திற்கு ஒரு சந்தேகம். பனங்கொட்டை போட்டால் வரம் வெல்லாம் பனை வடலி முளைக்கும். மரம் நட்டால் மரம் முளைக்கும்! அதுபோல் வேளாளரில் பிராமணம் முளைக்குமோ தெரியாது?

இப் பத்திரிகை கொக்குவில் மேற்கிலிருக்கும் திரு. வை. நல்லையா அவர்களால் தமது சந்திரதீப அச்சகத்தில் பதித்து பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org